664
9

ஜுபைதா

அல்லது பழிக்குப்பழி

"தாருல் இஸ்லாம்" ஆசிரியர்

பா. தாவுத்ஷா சாஹிப், பி.ஏ.

அவர்களால் எழுதப்பட்டது.

ஜவாஹிருல் புர்கான்.

இலக்கம் 25

பிரசுரம் :
இ. அப்துர் ரஹ்மான்
தபாற்பெட்டி நெ. 15
சென்னை.

1925

...4.] [Copy Right.

Q7
N25
85496

ஜவாஹிருல் ‘புர்:கான்

(:குர்ஆன் ஷரீ‘பின் தமிழ் மொழிபெயர்ப்பும் அதன் விரிவான வியாக்யானமும் ஒருங்கே கூடியது.)

320 பக்கங்கோண்டது. 159 ஆயத்துக்களடங்கியது.

விலை ரூ. 2—12—0.

அனேக காலமாக அதிக ஆவலுடன் எதிர்பார்த்திருந்த :குர் ஆன் ஷரீ‘பின் தமிழ்மொழிபெயர்ப்பானது வெளியாகிச் சிலமாதங் களுக்குள் 1,500 பிரதிகளுக்குமேல் செலவாய்விட்டன. இன்னும் சில காப்பிகளே எஞ்சியிருப்பதால் முந்தினவர்களுக்கே கிடைக் கும். வேதத்தைப்படித்து விமோசனத்தை யடையுங்கள்.

நபிகள் நாயகமும் நான்கு தோழர்களும்

142 பக்கங்கொண்ட கிரௌன் 8 பக்க ஸைஸில் நல்ல அழகிய அழுத்தமான உயர்ந்த காகிதத்தில் பதிப்பிக்கப்பட்ட ஒரு சிறந்த நூல். இதில் நபிகள் நாயகத்தின் அழகிய சரித்திரமும் அவர்களுக் குப் பின் அரசாண்ட நான்கு கலீபாக்களின் சரித்திரமும் மிக விளக்கமாகக் காணப்படும். பண்டைக்காலத்தில் அரபுராஜ்யமிருந்த நிலைமையும், அது இஸ்லாத்தினால் அடைந்த பெருமையும், துலக் கிக் காட்டப்பட்டிருக்கின்றன. அக்காலத்திய தேசப்படமொன் றும் சேர்க்கப்பட்டிருக்கிறது. ராப்பர் பயிண்டு 1—8—0. உயர் ந்த காலிகோ பயிண்டு 2—0—0.

நாயக வாக்கியம் 451 (முதல் பாகம்)

நபிகள் பெருமானின் சரித்திரச் சுருக்கத்துடன் 223 திரு வாக்கியங்களடங்கிய ஒரு சிறந்த நூல் இது. ஹிந்துமுஸ்லிம்களனை வரும் சட்டைப்பையில் வைக்கக்கூடிய ஸைஸில் அதிநேர்த்தியாக அச்சிட்டு அழகிய விதமாய் பைண்டுசெய்யப்பட்டிருக்கிறது. இதன் அருமை வாங்கிப் பார்ப்போருக்கே தெரியும். விலை அணா 8 தான்.

௸ இரண்டாம் பாகம்

இதில் நபிகள் நாயகத்தின் 228 திருவாக்கியங்க ளடங்கியிருக் கின்றன. இதன் கடைசியில் விளக்கமான விஷயசூசிகையொன் றும் சேர்க்கப்பட்டிருக்கிறது. இதனால் வேண்டிய திருவாக்கியங் களைச் சிரமமின்றிப் பார்த்துக்கொள்ளலாம். இதுவும் சட்டைப் பை யில் வைக்கக்கூடிய ஸைஸில் அதிநேர்த்தியான கடிதத்தில் அச் சிட்டு அழகிய பைண்டுசெய்யப்பட்டிருக்கிறது. விலை அணா 6 தான்.

தாருல் இஸ்லாம் புஸ்தகசாலை,
தபாற்பெட்டி நெ. 15, சென்னை.

ஜுபைதா

அல்லது

பழிக்குப்பழி

"தாருல் இஸ்லாம்" ஆசிரியர்

பா. தாவுத்ஷா சாஹிப், பி.ஏ.

அவர்களால் எழுதப்பட்டது.

பிரசுரம்:

இ. அப்துர்ரஹ்மான்

தபாற்பெட்டி 15

சென்னை.

காப்பீரைட்] 1925 [விலை அணா 4.

بسم الله الرحمن الرحيم
نحمده ونصلي على رسوله الكريم

ஜுபைதா

அல்லது

பழிக்குப்பழி

ஷாபாஸ் கான் என்பவன் வட இந்தியாவிலுள்ள மிகப் பெரிய நிலச்சுவான்தார்களுள் ஒருவனாயிருந்தான்; அவனுடைய சுவாதீனத்தில் ஒரு பெரிய ஜில்லாவின் முக்காற்பாகம்வரை இருந்துவந்தது; அவனுடைய நிலங்களை உழுது சாகுபடிசெய்து அவனுக்கு அதிகமான வரிப் பணத்தைக் குவித்துக் கொடுக்கக்கூடியவராயிருந்த இரண்டேகால் இலக்ஷம் ஜனத்தொகைகளுக்கும் அவனே தலைவனாயிருந்துவந்தான்; அக் குடிபடைகளின் தலைவிதியானது பெரும்பாலும் ஷாபாஸ்கானின் கையிலேயே இருந்துவந்ததென்று கூறலாம். அதிகமான ஐசுவரியமும் அளவுகடந்த

அதிகாரமும் தன்னிடம் இருந்துவந்ததனுலும், 'நான் வேறு எவருக்கு ஜவாப் சொல்லப்போகிறேன்'? என்னும் தைரிய மிருந்ததனுலும் அவன் ஒருவருக்கும் அஞ்சாத ஒரு சுயேச்சையான எதேச்சாதிகாரத்தையுடைய இறுமாப்புக் கொண்டவனுய்விட்டான். அவனுடைய பால்யத்தில் அவன் அந்த எஸ்ட்டேட்டில் நடத்தப்பட்டுவந்த விதமே அவனை இன்னும் கொடுமையான இரக்கமற்றவனுகவும் கொடூர மிக்க கடினசித்தமுள்ளவனுகவும் செய்துவிட்டது. அவன் எப்பொழுதும் எதனிடத்தும் வெறுப்பு மிக்கவனுகவே யிருந்துவந்தான். ஏனெனின், அவனுடைய இளம்பிராயத்தில் ஒரு வருஷத்தில் விஜயம்செய்த காலரா நோயினுல் தாக்கப்பட்டு அவனுடைய தகப்பனுர் காலகதியடைந்து தேகவியோகமாய்விட்ட பின்னர் அவருடைய ஆஸ்திகளை யெல்லாம் அபகரித்துக்கொண்டதோடு அண்ணன் மகனுகிய ஷாபாஸ்கான் என்னும் சிறுவனையும் கொலைசெய்துவிடப் பல முறையும் எத்தனித்து வந்த அப்படிப்பட்ட வியவஸ்தையில்லாத கொடுங்கோன் மனத்தையுடைய கொடூரச் சிறிய தந்தையின்கீழ் ஆருமற்ற அகதியாய் அதிபால்யத்திலேயே ஆய் விட்டான். சிறிய தந்தை செய்து வந்த எல்லாவிதமான சூழ்ச்சிகளுக்கும் தந்திரங்களுக்கும் தெய்வசங்கல்பத்தினுல் தப்பிக்கொண்டுவந்த ஷாபாஸ்கான் காளைப்பருவத்தை யடைந்தவுடன் தன்னுடைய பிதாவின் எஸ்ட்டேட்டை அந்தச் சிறிய தந்தையிடமிருந்து பிடுங்கிவிடவேண்டுமென்று தீர்மானம் செய்துகொண்டான். இதற்காகத் தன்னுடைய கௌமார அறிவினுல் எத்தனிக்கக்கூடிய சூழ்ச்சிகளின்மீதே அவன் சார்ந்திருக்க நேர்ந்தது. தன்னைப் பழக்குவிப்பதற்கு வேறுவிதமான துணையில்லாததனுலும், வியவஸ்தைகெட்ட கல் நெஞ்சனுகிய சிற்றப்ப

னுடன் போராடி மல்லுக்கு நிற்கவேண்டி யிருந்ததனுலும் ஷாபாஸ்கானே வியவஸ்தை கெட்டவனுகவும் கல்நெஞ்சுள்ளவனுகவும் சிறுவயதிலேயே மாறிவிட்டான். பொய்க்குப் பொய்யும், கோளுக்குக் கோளும், குறும்புக்குக் குறும்பும், வம்புக்கு வம்புமாய்ச் செய்துவந்ததனுல் ஷாபாஸ்கான் இறுதியில் ஒரு ஜமீன்தாராக ஆய்விட்டான். அவனுடைய சிறிய தந்தையோ நெடுங்காலம் அனுபவிக்கக்கூடிய தீவாந்தரசிக்ஷையை யடைந்துவிட்டான். இப்படிப்பட்ட வஞ்சனையும் சூதும் நிறைந்த போராட்டத்தில் வெற்றிபெற்று ஜயபேரிகையுடன் வெளிவந்ததனுல் ஷாபாஸ்கானும் மோசத்திலும் பலாத்காரத்திலுமே நம்பிக்கைகொண்டவனுக ஆய்விட்டான்.

இவ்வாறே அந்த ஜமீன்தார் இருந்துவந்திருப்பானுயின் அவனுடைய சிற்றப்பனைக்காட்டினும் மகாகெட்டவனுக மாறியிருப்பான். ஆனுல் அவனுடைய தீச்செயல்களை மிதப்படுத்துவதற்காகத் தேவலோக மாதுபோன்ற அப்ஸரஸ்திரீ ஒருத்தி அவனுக்கு மனைவியாக வாய்த்தாள். அம்மாது சிரோமணியை ஜமீன்தார் மிகவும் ஆழமாக நேசித்து அவள்பால் மேதை மரியாதையெல்லாம் காட்டத் தொடங்கினுன். இப் புனிதவதியினுல் ஜமீன்தாரின் நடவடிக்கைகளில் அதிகமான மாறுதல்கள் ஏற்பட்டுவிட்டதை அவனுடைய குடிபடைகளும் குடியானவர்களும் அதிசீக்கிரம் தெரிந்துகொண்டார்கள். ஆனுல் அந்தோ! நெடுநாள் அவர்களுடைய சந்துஷ்டியானது நிலைத்திருப்பதற்கு அதிருஷ்டமில்லாமற் போய்விட்டது. விவாகமாகிப் பத்தாம் மாதத்திலேயே அந்தப் புண்ணியசீலியாகிய மனைவியானவள் ஓர் இளங்குழந்தையை ஈன்றுவிட்டு ஆண்டவன் ஆணைப்படி அவ்வுலகுக்கு ஏகிவிட்டாள்; மனைவி இறந்த

துக்கத்தின் மேலீட்டால் ஜமீன்தார் யாருடனும் பேச மனமில்லாமல் மௌன சாகரத்துள் மூழ்கிவிட்டான். நாளுக்கு நாள் அவனுடைய "விடியாமூஞ்சித்தன"மானது அதிகமாக வளர்ந்தோங்கி வந்தது; ஆண்டவன்மீதிருந்த அணுத்துணை நம்பிக்கையும் போய், எஃகைக் காட்டினும் கடின சித்தமுள்ளவனாக மாறிவிட்டதனால் அவனைப் பார்த்தோர், "இவன் மனிதன்தானோ அல்லவோ!" என்று பரிதபிக்கும்படியாகக் கருங்கல்லைப்போல் சமைந்துவிட்டான். அதன்பின் எதிலும் சந்தோஷமில்லாமல் மந்தபுத்தியுடையவனாய் இரக்கமென்பதற்கே நெஞ்சில் கிஞ்சித்தும் இடங்கொடாமல் தன்னுடைய சுயேச்சாதிகாரத்தை மிகக் கொடுமையுடன் தன் குடிகளின்மீது செலுத்தலானான். நெஞ்சில் கிஞ்சித்தும் ஈரமில்லாமலிருந்ததனால் அவனுடைய உலோபிச்செல்வமானது ஒன்றுக்குமேல் ஒன்றாகக் குவிந்து வந்தது.

ஜமீன்தாரின் துக்கத்துக்குக் காரண பூதமாயிருந்த அவனுடைய மனைவியின் மரணத்தின்போது அம் மாது சிரோமணியின் வயிற்றினின்றும் தோன்றியிருந்த ஜுபைதா என்னும் அழகிய சிறுகுழந்தையின் சமீபத்திலிருக்கும் போதுமட்டுந்தான் ஷாபாஸ்கானின் முகமானது சிறிது மலர்ந்திருக்கும்; அப் பெண் குழந்தை ஒன்றினிடத்து மட்டுமல்லாமல் ஜமீன்தாருக்கு இவ்வுலகில் வேறெவ்வகைப் பொருள்களிடத்தும் பிரியமுண்டாவதில்லை; ஜுபைதாவின் தாயார் வாழ்ந்துவந்த ஒருவருஷ காலத்திற்குள் தன்னுடைய கணவனை எவ்வளவு நல்லவிதமாகப் பழக்கி வந்தாளோ அந்தவிதமான நற்குணத்துடன் அந்தப் புத்திரியினிடத்தில்மட்டுமே அம் மனைவி எதிர்பார்த்திருந்தபடி முகமலர்ச்சியுடனும் அகமகிழ்ச்சியுடனும் ஷாபாஸ்

கான் இருந்துவருவான். அவன் மறுபடியும் மணமுடித்துக் கொள்வதில்லையென்று தீர்மானித்துவிட்டான். குழந்தையின் நிமித்தமாகமட்டும் இவ்வாறு தனி வாழ்க்கை புரிய வேண்டுமென்று அவன் நினைத்தானில்லை; ஆனால் தன்னுடைய சொந்த நிமித்தமாகவே அவன் மறு மணம் புரிவதில்லையென்று வெறுத்துவந்தான். ஏனெனின், தன்னுடைய மனைவியின் திடுகூறான அகால மரணத்துக்குப் பின் இவ்வுலகில் விவாகம் புரிந்துகொள்வதனாலும் உயிர் வாழ்க்கை செய்வதனாலும் இனி என்ன சுகமிருக்கிறதென்று மனங் கசந்து நொந்துபோனான். ஆனால் அவனுடைய எஸ்ட்டேட்டில் இளம் ஜுபைதாவுடன் கூடி விளையாடுவதற்கு ஒருவரும் துணையில்லாமற் போய்விட்டனர். எப்பொழுதும் கடுகடுத்த முகத்துடனும் கசந்துபோன மனத்துடனும் இருக்கக்கூடிய தந்தையின் பிரியத்தினால் மட்டும் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வரும் ஜுபைதாவுக்கு ஒன்றும் திருப்தியான சந்துஷ்டி உண்டாவதில்லை. இதனால் ஜமீன்தாரும் எவ்வாறு தன்னுடைய ஏக புத்திரிக்கு மன உல்லாசத்தை ஊட்டுதல் முடியுமென்னும் ஆலோசனையுள் மூழ்கியிருந்தான்.

ஒருநாள் மாலைப்பொழுதில் ஷாபாஸ்கான் குதிரை மீதேறிச் சவாரிசெய்துகொண்டு போகும்போது அங்கோரிடத்தில் காபூலிகள் ஒரு கூட்டத்தினர் வந்து டோரா அடித்திருப்பதைக் கண்டான்; இவர்கள் பலூக்கிஸ்தானத்துக்கும் பாரசீகத்துக்கும் இடையிலுள்ள எல்லைப் பிரதேசங்களிலிருந்து புறப்பட்டுவந்து இந்தியா முழுதும் சுற்றிக்கொண்டு திரிவார்கள். "பழைய நாணயங்கள்" என்னும் பொய்ந் நாணயங்களையும் கத்தரிக்கோல்களையும் கத்திகளையும் சிற்சில சமயங்களில் நொண்டிக் குதிரைகளையும் கொ

ண்டுவந்து விற்பார்கள். ஏமாந்த இடங்களில் ஜபர்ஜஸ்தாய்ச் சில்லறைத் திருட்டுக்களும் சிலவேளைகளில் செய்து வயிறு வளர்ப்பார்கள். இவர்களுக்குக் காவலாய் வரும் இந்தியச் செந்தலைப் புலிகளும் தூரத்தில் நின்றுகொண்டு வேடிக்கை தான் பார்ப்பார்கள். அன்று மாலையில் அங்கே இறங்கி யிருந்த காபூலிகளின் கார்வானில் சில நொண்டித் தட்டு வாணி மட்டக்குதிரைகளும், சில காட்டெருமைகளும், சில ஆடுகளும், பல நாய்களுமே காணப்பட்டன; சில ஆண்க ளும், சில பெண்களும், சிற்சில குழந்தை குட்டிகளும் அதில் சேர்ந்திருந்தார்கள். அதற்கு முன் இரவில் அவர்களெல் லோரும் ஷாபாஸ்கானின் ஜில்லாவுக்குள் வந்து அவனு டைய ஊருக்குச் சில மைல்கள் தூரத்திலுள்ள வேறொரு கிராமத்தில் தங்கியிருந்தார்கள். ஜமீன்தாரின் வாஸஸ்தா னத்திலிருந்து அவர்கள் தங்கியிருந்த இடம் நெடுந்தூரத்தி லில்லாததனால் ஷாபாஸ்கான் சவாரிசெய்துகொண்டு போ கும்போது அவர்களுடைய கூடாரத்தண்டை வந்துசேர்ந் தான்; அங்கே அக்காபூலிகள் பகிரங்க ரஸ்தாவுக்கருகிலுள்ள காம்பு நிலத்தில் தங்கியிருந்தார்கள். அங்கிருந்த ஆண்க ளும் பெண்களும் வரப்போகும் இரவுக்கு வேண்டிய வசதி களைத் தங்களுடைய மோட்டா டேராவின் கீழ் அமைத்துக் கொண்டிருந்தார்கள்.

அவ்வேளையில் அவர்களுடைய குழந்தைகளெல்லோ ரும் சிறிதுதூரத்தில் நின்று விளையாடிக்கொண்டிருந்தார் கள். அக்கூட்டத்திலிருந்த ஒரு சிறு பெண் மகா ரூபவதியா யிருந்ததை ஷாபாஸ்கான் நோட்டமிட்டான். காபூலிகள் அணிந்துகொள்ளும் வழக்கம்போல் நீண்ட அங்கியையும் தரையினின்றும் உயர்ந்திருக்கும் பாவாடையையும் உடுத் திக்கொண்டும் ஒரு சரட்டில் கோத்த பற்பல விதமான

நாணயங்களைக் கழுத்தி லணிந்துகொண்டும் நின்றதனால் அப்பெண் குழந்தையின் சாமுத்திரிகா லக்ஷணமானது பரி பூர்ணமுள்ளதாய்க் காணப்பட்டது. மீனைப் பழித்த கண் ணும், மானைப் பழித்த பார்வையும் மகா வஜீகாத்துடன் தோன்றும்போது அப் பெண்ணின் புன்முறுவலினால் செவ்விய கொவ்வை யுதடுகளுக்குள்ளிருந்த மணிமுத்துப் போன்ற வரிசையான பற்களும் பார்ப்போருக்கு அதிகப் பிரியத்தை வருவிக்கக்கூடியவையா யிருந்தன. ஷாபாஸ் கான் அப் பெண்குழந்தையின் அழகைக் கண்டவுடன் தன்னுடைய குதிரையின் கடிவாளத்தை இறுகப் பிடித்துக் கொண்டு அச் சிறுமியின் பூர்ணச் சந்திரன் போன்ற வத னத்தையே விடாமல் கூர்ந்து நோக்கினான். சில வினாடி களுக்குள், எட்டு வயதையடைந்திருக்கும் தன்னுடைய இளங் குமாரியாகிய ஜுபைதாவின் வயதைப்போன்ற வய தையும் அவ்வழகைப்போன்ற அழகையும் இந்தக் காபூலிக் கன்னிகையிடம் கண்டு அந்த ஜமீன்தார் திடுக்கிட்டான்; உடனே அப் பெண்ணைத் தன்னுடைய மாளிகைக்கு எவ் வாறேனும் கொண்டுபோய்ச் சேர்த்துவிடவேண்டுமென்று தீர்மானித்தான். விளையாடுவதற்குத் தோழியில்லாமல் தனியே கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த தன்னுடைய ஜுபை தாவுக்கு இச்சிறுமி ஒரு தகுந்த தோழியா யிருக்கக்கூடு மென்று கருதினான். ஆனால் அக்குழந்தைக்காக எவ்வளவு பெருந்தொகையான பணங் கொடுப்பதா யிருந்தபோதி லும் அந்தக் காபூலிகள் தங்களுடைய குமாரியை விட்டுப் பிரியச் சம்மதிக்கமாட்டார்களென்றும் ஜமீன்தார் தனக்குள் எண்ணிக்கொண்டான்; ஆயினும் அச்சிறுமியை எப்படியா யினும் ஜுபைதாவுக்குத் துணையாகக் கொண்டுபோய்ச் சேர்க்கத்தான்வேண்டுமென்னும் எண்ணமும் மற்றொரு பக்

கம் தூண்டிக்கொண்டிருந்தது. கபடமும் சூழ்ச்சியும் கனமாகக் குடிகொண்டுள்ள அவனுடைய மூளையில் இதற்கொரு யுக்தியான வழி தோன்றாமற் போகவில்லை. உடனே திடீரென்று அச்சிறுமியைப் பறித்துத் தன்னுடைய குதிரைமீதிருத்தி அந்த அந்திமாலைப் பொழுதுக்குள்ளேயே தன்னுடைய மாளிகைக்கு விரைவாகச் சென்று அங்கே அக்குழந்தையை மறைத்து வைத்துவிடும் பக்ஷத்தில் அந்தக் காபூலிகளெல்லோரும் என்செய்யக் கூடுமென்று எண்ணினான்; ஆனால் அவர்கள் தன்னுடைய மாளிகை இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்து அங்கே வந்து தங்களுடைய குழந்தையைத் தேடுவார்களாயின் அவர்களுக்கு வேண்டிய அதிகமான திரவியத்தைக் கொடுத்துவிடுவதாகத் தீர்மானித்தான். அப் பெருந்தொகையான ஐசுவரியத்தை அவர்கள் பெற்றுக்கொண்டபோதிலும் மறுத்துவிட்டபோதிலும் அவர்களுடைய குழந்தையைமட்டும் எக்காரணத்தை முன்னிட்டும் ஒருபோதும் திருப்பிக் கொடுப்பதில்லையென்று தீர்மானித்துவிட்டான். அல்லது அவர்கள் தன்னுடைய மாளிகையைக் கண்டுபிடிக்காமற் போய்விடினும் தன்னுடைய எஸ்ட்டேட் எஜெண்ட்டுகள் மூலமாக அப் பெருந் தொகையான பணத்தை அனுப்பி, அவர்களிடத்திலிருந்த நொண்டிக் குதிரைகளையும் மெலிந்த எருமைகளையும் பொய்யான நாணயங்களையும் வாங்கிக்கொண்டேனும் அவர்களுக்கு ஒருவிதமான ஆத்ம திருப்தியைச் செய்து வைக்கலாமென்று எண்ணினான். அந்தக் காபூலிகள் தங்களுடைய தட்டுவாணிக் குதிரைகளையும் தைரியமில்லா எருமைகளையும் பொய்யான நாணயங்களையும் புரட்டான ஆபரணங்களையும் கொடுத்து இவ்வளவு பணம் பறித்துக் கொண்டோமே என்னும் மனச்சாந்தியுடன் காணமற்

போன கன்னிகையையும் அதிகமாகத் தேடாமல் அயலூருக்குப் போய்விடுவார்களென்று அந்த ஜமீன் தார் எண்ணினன்; அவர்கள் அவ்வாறு திருப்தியடைந்த போதிலும் அடையாமற்போயினும் ஷாபாஸ்கானின் மனம் மட்டும் இப்படிப்பட்ட சூழ்ச்சிகளா லெல்லாம் திருப்தி யடைந்துவிடும்: அங்கே விளையாடிக்கொண்டிருந்த மற்றைச் சிறுவர் சிறுமிகளைவிட்டு அந்தப் பெண்ணைமட்டும் பிரித் துக் கொண்டு போவதற்காகப் பிரயத்தனம் செய்த ஷாபாஸ்கானின் சமாதானமும் தர்க்கமும் இவ்வாறிருந்தன. உடனே அவன் அக்குழந்தையைப் பூமியினின்றும் பலாத் காரமாகத் தூக்கியெடுத்துத் தன்னுடைய குதிரையின்மீது தனக்கு முன்னே ஜேணத்தில் உட்காரவைத்துக்கொண்டு ஜுபைதாவிடம் கொண்டு போய்க் காட்டுவதற்காக ஷாபாஸ்கான் அதிவேகமாகத் தன்னுடைய குதிரையைத் தட்டிவிட்டான்.

இந்தக் காபூலிப் பெண்ணைத் தன்னுடைய மாளிகைக் குக்கொண்டு வந்தவுடன் ஜமீன்தார் தனது முக்கியமான முதல் காரியக்காரனை அழைப்பித்து அவன்வசம் அச்சிறு மியை ஒப்புக்கொடுத்துத் தன்மாளிகையில் நிலவறையின் ஒருமூலையில் கொண்டுபோய் ஒளித்து வைக்கும்படியாகக் கட்டளையிட்டான். இவ்வாறு பத்திரப்படுத்திவிட்டு, அதன் பின் காபூலிகளால் கிளப்பப்படும் கிளர்ச்சிகளெல்லாம் ஒரு வாறு அமைதியடைந்த பின்னர் சிலதினங்கள் கழித்து அச் சிறுமியை ஜுபைதாவிடம் காண்பிக்கலாமென்று எண்ணிக் கொண்டு மனத் திருப்தியுடன் படுக்கைக்குப் போய்விட் டான். அவன் கண்ணுறங்கிய பின் சில நாழிகைகளுக்குள் மாளிகையின் மதிற் சுவருக்கு வெளிப்புறத்தில் அதிகமான ஆரவாரம் உண்டானதைக் கேட்டு ஷாபாஸ்கான் திடுக்கிட்டு

விழித்தான். சமாசாரம் என்னவென்று கேட்டபோது ஒரு காபூலிக்கூட்டம் வந்து பெருங்கூச்சலிட்டு வெளிவாயிற் கதவைத் தாக்குவதாக அருகிலிருந்தவர்கள் கூறினார்கள்; தங்களிட மிருந்த ஏதோ ஓர் பெண்ணை யாரோ ஒருவர் களவாடிக்கொண்டுபோய் விட்டதாகவும், அதனால் அவர்கள் அக் குழந்தையைத் தேடிக்கொண்டு ஜமீன்தாரின் மாளிகைக்கு வந்திருப்பதாகவும் ஏதோ ஓர் பாஷையில் அரைகுறையாகப் பேசுகிறார்களென்று மாளிகையி லிருந்தோர் கூறினார்கள். இதைக் கேட்டவுடன் மெய்யாகவே ஷாபாஸ்கானின் மெய்யானது சிறிது சிலிர்த்தது; அவர்கள் எவ்வாறு தன்னுடைய மாளிகையின் அடையாளத்தைக் கண்டுபிடித்து வந்துவிட்டார்களென்று ஆச்சரியமடைந்தான். ஆயினும் அந் நேரத்தில் வந்து அட்டகாசம் செய்த அந்தக் காபூலிகளைத் தன்னுடைய காவற்காரர்களாகிய பட்டான்களைக் கொண்டு தனது மாளிகையைவிட்டு அதிக தூரம் விரட்டியடிக்கச் சொல்லாமல், அவர்களைச் சாந்தமாகச் சமாதானம் செய்தே ஏமாற்றி விடலாமென்று நினைத்தான் அந்த இறுமாப்புக்கொண்ட ஜமீன்தார்; அவர்களுடன் வம்புசெய்யாமல் மிக நல்ல மாதிரியாகவே அவர்களை அதிலகுவில் திருப்தியுடன் திரும்பிச் செல்லும்படி செய்துவிடலாமென்றும் தீர்மானித்துக் கொண்டான்; உடனே அந்தக் காபூலிகளை யெல்லாம் உள்ளே வரவழைத்துத் தனக்கொன்றும் அப்பெண்ணின் விஷயம் தெரியாதென்று கூறி, "எனக்கு உங்களுடைய காபூலிப் பெண்ணால் என்ன பிரயோஜனம் உண்டாகப்போகிறது?" என்று மிக நிதானத்துடனும் அமைதியுடனும் அவர்களுடன் வாதாடினான். எனினும் அந்தக் காபூலிகள் தங்களுடைய குழந்தையை அந்த ஜமீன்தாரே தூக்கிக்கொண்டு வந்துவிட்டானென்று

அதிக பலமாகச் சந்தேகித்திருந்த படியால் அம்மாளிகை யின் அறைக்கதவுகளை யெல்லாம் திறந்து ஒவ்வொரு மூலை முடுக்கிலும் தாங்கள் சுயமே தேடிப்பார்த்தாலல்லாமல் தங் களுக்கொன்றும் திருப்தியுண்டாகா தென்று கூச்சலிட்டார் கள்; அவர்களுடைய சந்தேகத்தைக் கண்டு ஜமீன்தாருக்கு ஆத்திரம் உண்டானபோதினும் அவர்களுடைய பூசலின் முன் அவனால் ஒன்றும் செய்யக்கூடவில்லை. தன்னுடைய மாளிகைக்கப்பால் அவர்களை யெல்லாம் பிடரியைப் பிடித் துத் தள்ளி விடலாமென்றும் ஒருசமயம் தீர்மானஞ் செய் தான்.

இதற்கெல்லாம் அந்தக் காபூலிகள் பயந்து விடவில்லை; உடனே அவனை நெட்டித்தள்ளிவிட்டு அக்காபூலிகள் அனைவ ரும் அம்மாளிகையின் உட்புறமெல்லாம் தேனீக்களைப்போல் நிரம்பி மொய்க்க ஆரம்பித்துவிட்டனர்; மாளிகையைச் சுற் றிச் சுற்றிப் பார்த்தனர்; உட்புறமெல்லாம் நுழைந்து நுழை ந்து பார்த்தனர்; மூலை முடுக்கெல்லாம் தடவித் தடவிப் பார்த்தனர். அவர்களுடைய மனத் துணிவையும் வீராவே சத்தையுங் கண்டு ஷாபாஸ்கானின் மனமானது அதிகம் குழம்பிவிட்டது. ஆயினும் அவர்களுடைய பெண்ணைமட் டும் திருப்பிக் கொடுக்க ஜமீன்தார் கொஞ்சமும் இசைய வில்லை. அவனுடைய திவான்கானா, கச்சேரி, மேல்மாடி, கீழ் மாடி முதலிய இடங்களையும், அவனுடைய வேலைக்காரர்கள் வசிக்கும் ஒவ்வோர் இடத்தையும், இன்னும் அவனது மகதைசுவரியமான பெருமையைக் காண்பிப்பதற்குரிய அரைடஜன்யானைகள் கட்டப்பட்டிருந்த யானைக்கொட்டடி யையும் தேடிவிட்டு அந்தக் காபூலிகள் திரும்பிவரும்போது ஷாபாஸ்கான் அவர்களைக் கூப்பிட்டுத் தன்னுடைய ஜனனாவின் கதவுகளையும் திறந்துவிடுவதாயும், அவர்களு

டைய பெண்களையே தன்னுடைய அந்தப்புரத்துக்கு அழைத்துக்கொண்டு போவதாயும், அங்கேயும் அம் மாதர்கள் அக் குழந்தை யிருக்கிறதோவென்று நன்றாகத் தேடிப் பார்த்துக்கொள்ளும்பொருட்டு அனுமதி கொடுப்பதாயும் கூறினான்.

இவ்வாறெல்லாம் எங்கெங்கும் தேடியும் அங்கிருந்தெல்லாம் அக் குழந்தை அகப்படவில்லை. சாதாரணமான இடங்களில்மட்டும் அவர்கள் தேடினார்களே யல்லாமல் அந்த மாளிகைக்குள் பூமியின்கீழ்ச் சுரங்கமாகச் செய்யப்பட்டிருக்கும் நிலவறையொன்று இருப்பதை ஒரு சிறிதும் அவர்கள் அறியமாட்டார்கள். மாளிகை முழுதும் தேடிப் பார்த்தும் மகளைக் காணாததால் அந்தக் காபூலிகள் இன்னும் கடுமையாக ஜமீன்தாரைத் தொந்தரை செய்ய ஆரம்பித்தனர். நயமாகக் கேட்டதற்கெல்லாம் ஷாபாஸ்கான் இணங்கி வாராததனால் பிறகுபயமுறுத்தாட்டவும் தொடங்கினர்; அவர்களுடைய தீரமான தொனிக்குத் தகுந்தாற்போல் அன்னாரின் செக்கச் சிவந்த கண்களினின்றும் கோபக்குறியின் அனற் பொரியானது சிதறிச் சிந்த ஆரம்பித்தது; அதனாலும் ஒன்றும் பயன் விளையாததால் அந்தக் காபூலிகள் தங்களுடைய சிறுமிக்காகப் பணம் வேண்டுமாயினும் எவ்வளவேனும் அந்த ஜமீன்தாருக்குக் கொடுப்பதாகவும் வாக்குறுதி கூறினார்கள்; தாங்கள் பணங் கொடுப்பதாகவும் குதிரைகளைக் கொடுப்பதாகவும் எருமைகளைக் கொடுப்பதாகவும் இன்னும் தங்கள் பாலுள்ள எதை வேண்டுமாயினும் அதை எல்லாம் கொடுப்பதாகவும் வாக்குறுதி கூறித் தங்களுடைய ஷீரீனைமட்டும் திருப்பிக் கொடுத்துவிடும்படி கெஞ்சிக் கேட்டுக்கொண்டார்கள். ஆனால் ஷாபாஸ்கானோ சற்றும் மனமிரங்காமல் ஒரே பிடிவாதமுள்ள

வனுயிருந்தான். காபூலிகள் ஏழைகளாயிருந்தபோதிலும் அதிகமான மமதைநிறைந்தவர்கள்; ஆயினும் அவ்வேளையில் தங்களுடைய ஷீரீன்மீ திருந்த வாஞ்சையினுல் அவ்வளவு தூரம் ஷபாஸ்கானிடம் மன்றுடிக் கெஞ்சிக்கேட்டார்கள். என்ன சொல்லியும் ஜமீன்தாரின் மனம் இளகவில்லை; அவன் தனக்கொன்றும் தெரியாதென்றே சொல்லிவந்தான். மாலையில் விளையாடிக்கொண்டிருந்த மகளை உயிருடன் பறிக்கக் கொடுத்த ஷீரீனின் தாயார் தரையில் விழுந்து புரண்டு அலறிக்கொண்டிருந்த பரிதாபகரமான தன்மையும், கல் நெஞ்சனுகிய ஷாபாஸ் கானைத்தவிர்த்து மற்றெல்லோருடைய மனங்களையும் கலங்கச்செய்து அன்னுரின் கண்களினின்றும் சோகபாஷ்பத்தைத் தாரை தாரையாகச் சொரித்துக்கொண்டிருந்தது. ஆனுல் அதற்குமாருக அந்தத்தாயின் கூக்குரலால் ஜமீன்தாரின் ஆத்திரமானது அதிகப்பட்டு வந்தது; உடனே அந்தக் காபூலிகளெல்லோரையும் காம்ப்பவுண்டுக்குவெளியே தள்ளிக்கதவையடைக்கும்படி உத்தரவிட்டான். தன்னுடைய எஸ்ட்டேட்மானேஜரைப் பார்த்து அருணேதயத்துக்கு முன் ஒரு காபூலியும் தன்னுடைய ஜில்லாவுக்குள் இல்லாமல் வெளியே போய்விடும்படி செய்ய வேண்டுமென்று மிகக்கடுமையாகக் கட்டளையிட்டான்.

ஜமீன்தாரின் காவற்காரர்களாகிய பட்டான்கள் தங்களுடைய எஜமானின் உத்தரவை நிறைவேற்றும்பொருட்டு அந்தக் காபூலிகளுக்கருகில் சென்றபோது அவர்களுள் தலைவனுயிருந்த ஷீரீனின் தந்தையான காபூலியானவன் திரும்பி நின்று அந்தப் பட்டான்களின்முன், "நீங்களெல்லோரும் அங்கேயே நில்லுங்கள்! யாரேனுமொருவன் ஓரடிவைத்து முன்வந்தால் அவனுடைய உயிர் அங்கேயே எமலோகம் சேரும். இப்படிப்பட்ட கொடுங்கோன் மனிதனுன அயோக்

கியனின் கீழ் அடிமைகளாயிருக்கின்ற நாய்களைப்போன்ற உங்களை நாங்கள் அனுவசியமாகக் கொன்று எங்களுடைய கையில் இரத்தக் கறையை உண்டுபண்ணிக்கொள்ள மாட்டோம்; ஆனாலும் அதற்கோர் எல்லையுண்டு; அதை மீறி எவனேனும் வருவானாயின் அவனுடைய கழுத்தை இந்தக் கத்திக்கு இரையாக்குவேன்!'' என்று தன் கண்களில் அனற் பொரி பறக்க மகா ஆத்திரத்துடன் பேசினான்.

இவ்வாறு ஏசியதுடன் உயிர்க்கிறுதி வருமென்று பய முறுத்தாட்டியதனால் ஒன்றும் பிரயோஜன முண்டாகாமற் போகவில்லை: ஒவ்வொரு பட்டானும் தான் தான் இருந்த விடத்திலேயே நின்றுவிட்டான். ஷாபாஸ்கானும் பிரமை யினால் திகிலடைந்து அதற்குமேல் ஒன்றும் சொல்ல நாவெழாமல் மௌனமா யிருந்துவிட்டான். அவனைப் பார்த்து அந்தக் காபூலித் தலைவன் பின்வருமாறு கூறினான்: "ஷாபாஸ் கான்! நீயொரு பெரிய ஜில்லாவின் ஜமீன்தாராயிருந்த போதிலும் நீயேதான் எங்களுடைய குழந்தையைக் கொள்ளை கொண்டு வந்துவிட்டாயென்று நாங்கள் நிச்சயமாக நம்புகிறோம். இங்கே எங்களுடைய சிறுமியைக் கண்டுபிடிக்கக் கூடவில்லை யென்பது வாஸ்தவமே; ஆயினும் உன்னுடைய வாஸஸ்தலத்தின் வாயில் வரையில் நாங்கள் தேடிக் கண்டு பிடித்துக்கொண்டு வந்துவிட்டோம்; நாங்கள் தேடுவது ஒரு போதும் வீணாகாது. நீதான் எங்களைவிட்டுப் பிரித்து எங்கள் குழந்தையைக் கொண்டுவந்திருக்கிறாய். இன்னும் உனக்கு அவகாசம் கொடுக்கிறேன்; ஆனால் இப்பொழுதேனும் நீ இணங்கிவராவிடின் பின்னர் அதிகமான துயரத்துக்கு ஆளாகும்படி நேரிடும். அதிஜாக்ரதை! அப்பொழுது நீ அதிகம்வருந்துவாய்; இன்னும் ஒருவார்த்தைமட்டும் கூறி விட்டு நாங்கள் போய்வருகிறோம்: காபூலியொருவன் தன்னு

டைய குழந்தைகளிடம் அளவுகடந்த பக்ஷம் பாராட்டுவது உண்மையே; ஆனால் அவன் பழிக்குப்பழி வாங்குவதில் இன்னும் அதிகமான பிரியங்காட்டுகிறானென்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்!" இவ்வாறு உக்கிரத்துடன் சொல்லிக்கொண்டு அந்தக் காபூலியானவன் அந்த ஜமீன்தாரை விட்டுத் திரும்பி மகா பிடிவாதமான எண்ணங்கொண்டவனே போல் ஆத்திரத்துடன் அழுத்தமாகவும் கம்பீரமாகவும் நடந்துசென்றான்.

மறுநாள் விடியுமுன் அங்கே டேரா அடித்திருந்த காபூலிகளெல்லோரும் தங்களுடைய குடிசைகளைக் கிளப்பிக் கொண்டு போய்விட்டார்கள். ஷாபாஸ்கான் அன்று காலையில் ஆகாரம் செய்ய உட்காரும்போது அவனுடைய எஸ்டேட் மானேஜரும் வந்து தங்களுடைய ஜமீன் ஜில்லாவுக்குள் ஒருவரேனும் காபூலியில்லை யென்று கூறிவிட்டான்.

இவ்வாறு ஒருவாரம் சென்றது. அதிலகுவில் அந்தக் காபூலிகளை ஏமாற்றிவிட்டதனால் ஷாபாஸ்கானுக் குண்டான மனத்திருப்திக் கொன்றும் அந்த வாரத்தில் கிலேச முண்டாகவில்லை. தன்னுடைய சமயலறைக்கு வெளிப்புறத்தில் யாரோ ஓர் காபூலிப் பெண்பிள்ளையானவள் வட்டமிட்டுக் கொண்டிருந்தாளென்பதையும் கேள்வியுற்று, அவள் ஏதேனும் பிச்சைச் சோற்றுக்காக வழிபார்த்திருத்தல் கூடுமென்று ஜமீன்தார் தன்னுடைய மனத்துக்குள் சமாதானம் செய்துகொண்டான்.

ஆனால் சிலநாட்கள் கழிந்தபின் ஜமீன்தாரின் குமாரியாகிய ஜுபைதாவுக்கு ஒருவிதமான வியாதியுண்டாயிற்று. ஒருநாள் மாலைப்பொழுதில் தன்னுடைய தலை கிறுகிறுக்கிறதென்று கூறிக்கொண்டு முன்னேரத்திலேயே இராப்போஜனம் செய்துகொண்டு ஜுபைதா தன்னுடைய படுக்கைக்

குப் போய்விட்டாள்; மறுநாள் விடிந்து எட்டுமணி யடித்தும் அப் பெண் எழுந்திருக்கவில்லை. யார்யார் எழுப்பியும் குழந்தை எழுந்திருக்காததனால், அதன் பிறவித்தினமுதல் எட்டு வருஷங்கள் மட்டும் அக்குழந்தையைச் சீராட்டிப் பாராட்டிப் பாதுகாத்து வளர்த்துவந்த செவிலித்தாயாகிய அன்னாவும் கடைசியில் சென்று தன்னாலானமட்டும் எழுப்பிப்பார்த்தாள். ஆனால் ஜுபைதா எழுந்திருக்கவுமில்லை; பதில்பேசவுமில்லை. இதைக்கேட்டு மாளிகையிலுள்ள அனைவரும் திகில்கொண்டார்கள். உடனே சமாசாரம் ஷாபாஸ்கானுக்கு அறிவிக்கப்பட்டது; ஜமீன்தார் அப்பொழுதே தன்னுடைய குடும்ப ஹக்கீமுக்கு ஆளனுப்பினான். அந்த வயோதிகரான ஹக்கீம் சாஹிப் இரண்டு தலைமுறையாக அந்த ஜமீன்தார் குடும்பத்துக்கு வைத்தியம் பார்த்து வருகிறார். இதைக் கேட்டவுடன் அந்தப் பெரியவர் அவசரமாக ஓடிவந்து தமக்குத் தெரிந்த ஹிக்மத்தை யெல்லாம் செய்துபார்த்தார்; ஜுபைதாவுக்கோ பிரக்ஞை வரவில்லை. மாளிகையிலுள்ள வயதுசென்ற மாதர்களோ இது ஹக்கீமினால் தெளியக்கூடிய வியாதியல்லவென்றும் காபூலிகளின் மாந்திரீக சக்தியால் விளைந்திருக்கக் கூடிய சங்காதோஷமென்றும் மூடத்தனமாகக் கூறி மந்திரம் ஓதி மாங்காய் விழவைப்பதற்காக மௌல்விமார்களை அழைத்துவரும்படி வேண்டிக்கொண்டார்கள்.

அங்கிருந்த பெண்களுக்குண்டான மூட பக்தியே போல் ஷாபாஸ்கானின் குற்றமுள்ள நெஞ்சிலும் ஒருவிதமான மூட நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது; உடனே ஜமீன்தார் தனக்குண்டான ஆத்திரத்தையடக்கிக்கொண்டு வயது சென்ற ஹக்கீம் சாஹிபை அவசரமாக அனுப்பிவிட்டுச் சுற்றுப்பக்கங்களிலுள்ள எல்லா மஸ்ஜித்களிலுமிருந்து

அங்கங்கேயுள்ள மௌல்விகளையெல்லாம் மந்திரம் படிப்ப தற்கு அதிக ஆவலுடன் அழைப்பித்தான். அவர்களனை வரும் ஷாபாஸ்கானின் உத்தரவைக் கேட்டவுடன் அதிக அவசரமாக ஓடிவந்தார்கள்; சிலர் தங்களுடைய வைதிகப் பற்றினால் துரிதமாக நடந்துவந்தார்கள்; மற்றும் பலர் ஜமீன் தாரிடமிருந்து அதிகதாராளமான நன்கொடை கிடைக்கு மென்னும் ஆர்வத்தினால் ஆவலுடன் பறந்துவந்தார்கள். மௌல்விகளெல்லோரும் மாளிகைக்குள் வந்து பிரக்ஞை யற்றுக்கிடக்கும் ஜுபைதாவின் படுக்கையைச்சுற்றி நின்று கொண்டு தங்களுக்குத் தெரிந்த வஜீபாக்களையும் மாந்திரீ கங்களையும் நெடுநேரம் வரையில் முணுமுணுத்து ஓதியோதி ஊதினார்கள். ஒருமணி நேரம் இவ்வாறெல்லாம் ஓதிப்பார்த் தும் அந்தப்பெண் உசும்பவேயில்லை; உடனே அதற்குமுன் ஹக்கீம் சாஹிபை வெறுப்புடன் அனுப்பிவிட்டதேபோல் ஷாபாஸ்கான் அந்த மௌல்விகளையும் கடுகடுத்த மூஞ்சி யுடன் வேகமாக விரட்டிவிட்டான். மீண்டும் ஹக்கீம் சாஹி பை வரவழைத்தான். அவர் மறுபடியும் வருவதற்கு மன மில்லாதிருந்தும் ஜமீன்தாரின் கட்டளையை மறுக்கமுடியா மல் மீண்டும் ஒருமுறை ஓடிவந்தார். ஜுபைதாவுக்கு ஸ்மரணையை உண்டுபண்ணவேண்டுமென்னும் நல்லெண்ண மானது அந்த ஹக்கீம் சாஹிபின் மனத்தின்கண் ஆழமா கக் குடிகொண்டிருந்தபோதிலும் ஜமீன்தார் தம்மிடம் நட ந்துகொண்ட மரியாதைக்குறைவுமட்டும் அவருடைய உள்ளத்தைவிட் டொழிந்தபாடில்லை. ஆயினும் அங்கு வந்தவுடன் ஜுபைதாவின் நாடியைத் தொட்டுப்பார்த் தார்; தாம் நாடியபடியே மௌல்விகளின் ஜபதபங்களினால் ஒன்றும் "ஜபம்" சாயவில்லை யென்று தமக்கு உள்ளுக்குள் உண்டான மனக்கிளர்ச்சியை அடக்கிக்கொண்டு, நீம் ஹக்

கீமுக்கு (அரை வைத்தியனுக்கு) நெடுங்காலமாக உபயோகிக்கப்பட்டு வந்த பழமொழியானது நீம் முல்லாவுக்கு (அரை ஆலிமுக்கு) உபயோகிக்கப்படும்படியான வேளை வந்துவிட்டதனால் கத்ரெ ஈமானுக்கு (மத நம்பிக்கையில் ஏற்படும் ஆபத்துக்கு) பதிலாய்க் கத்ரெஜானே (உயிருக்கே ஏற்படும் ஆபத்து) வந்துவிட்டதென்று சுருக்கமாகக் கூறி முடித்தார்.*

ஜுபைதாவின் கை கால் முதலிய அவயவங்களெல்லாம் "ஜில்லிட்டுப்" போய்விட்டன; தாதுவோ அடியோடு நின்றுவிட்டது. இனிமேல் ஒன்றும் பரிகாரத்துக்கு இடமில்லை! அதுவரையில் உள்ளுக்குள் அடங்கிக்கிடந்த ஷாபாஸ்கானின் ஆத்திரமானது இப்பொழுது அடியோடு பலங்குன்றி உடைந்துவிட்டது. காபூலிகளின் மந்திர சக்தியினால் தன்னுடைய குமாரி இறந்திருக்கக் கூடுமென்று அவனுடைய பகுத்தறிவானது அவனுக்கு அறிவுறுத்தவில்லை. ஆனால் அந்தக் காபூலிகளின் கைவசமிருந்து அவர்களுடைய அருமைக் குழந்தையைக் கொள்ளைகொண்டு வந்துவிட்டதனால் மரணத்தின் மலக்கே தன்மீது பழிக்குப்பழி வாங்கியிருப்பதாக அவனுடைய குற்றமுள்ள நெஞ்சானது

---

* "நீம் முல்லா கத்ரெ ஈமான்; நீம் ஹக்கீம் கத்ரெ ஜான்" என்பதோர் உருதுப் பழமொழி. அரை ஆலிமால் ஈமானுக்கு மோசம் வந்துவிடுமென்றும், ஆனால் அரை வைத்தியனால் உயிருக்கே மோசம் வந்துவிடுமென்றும் இதற்குத் தாத்பரியங் கொள்வர். ஈமான் போய்விட்டாலும் அதைப் புதுப்பித்துக்கொள்ளலாம். உயிர் போய்விடுமாயின் ஒன்றும் செய்வது முடியாது. வழக்கம் போல் அரை வைத்தியனால் உயிர்போக வேண்டியிருக்க, ஈமானை மட்டும் போக்கடிக்கக்கூடிய சாமர்த்தியமுள்ள அரை ஆலிமால் இப்பொழுது உயிருக்கே அபாயம் வந்துவிட்டதென்று ஹக்கீம் சாஹிப் கூறினர்.

குறுகுறுக்கத் தொடங்கிற்று; ஜமீன்தாரின் மனவருத்த மானது ஆரம்பத்தில் அதிகமாயிருந்தபோதிலும் பிறகு சிறிதுநேரத்திற்கெல்லாம் அந்தத் துக்க முழுதும் அவனது கொடிய சிந்தனைக்குள் புக்குமறைந்தது. அதன்பின் உரிய காலத்தில் வீட்டின் தலைமைக்கார அதிகாரிக்குப் பிரேதச் சடங்குகளுக்கு வேண்டிய காரியங்களைத் தயாரிக்கும்படி யான அனுமதி அளிக்கப்பட்டது. அப்பால் யாதொருவித மான ஆடம்பரமுமில்லாமல் ஜுபைதாவின் பிரேதமானது அதற்கென் றேற்படுத்தப்பட்டிருந்த ஒரு கல்லறைக்குள் வைத்துப் பத்திரமாக அடக்கம் செய்யப்பட்டது. கருங் கல் செங்கற்களைக் கொண்டும் சுன்னத்தைக் கொண்டும் அந்தச் சமாதியை நன்றாகக் கட்டிவைக்கும்படி ஷாபாஸ் கான் அனுமதி கொடுத்துவிட்டான். பிறகு அந்த ஜமீன்தார் தன்னுடைய மாளிகையின் திவான் கானாவிலிருந்த ஒருசிறு அறைக்குள் புகுந்துகொண்டு எக்காரணத்தை முன்னிட் டும் எவரும் வந்து தனக்குத் தொந்தரை கொடுக்கக்கூடா தென்று தங்களுடைய ஏவலாளருக்குக் கடுமையான உத் தரவு கொடுத்துவிட்டான். அங்கே ஷாபாஸ்கான் வெறுங் கட்டிலின்மீது படுத்துக்கொண்டு ஆகாயத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டே யிருப்பான். ஏதோ தன்னுடைய வீட்டின் முகட்டில் தன் செல்வக்குமாரியின் தோற்றமா னது காணப்படுவதேபோல் அண்ணாந்தபடியே ஆகாயத் தை வெறிக்கப் பார்த்துக்கொண்டே யிருப்பான்.

நாட்களோ பல கழிந்தன. ஆனால் ஷாபாஸ்கானின் துக்கமோ சிறிதும் தணியவில்லை. அன்று ஜுபைதாவை அடக்கஞ்செய்தபோது அந்தப் பிரேதத்தைப் பார்த்துக் கொண்டிருந்த காலையில் அவனுக்குண்டாயிருந்த அதேவித மான மௌனம் நிறைந்த துக்கசாகரமே பிறகு எப்பொழு

தும் நிரம்பத் ததும்பிக்கொண்டிருந்தது. துயரத்தினுல் மேலே என் செய்வதென்பது புலப்படவில்லை; ஆனுல் அவன் ஒருபோதும் கண்ணீர்விட் டழுவதில்லை. ஒருமுறை யேனும் விம்மியழுததில்லை; ஒரு முறையேனும் ஒருபெரு மூச்சும் விட்டதில்லை. அந்தக் காபூலிகளின் அருமைக் குழந் தையைத் திருடிக்கொண்டு வந்துவிட்டதற்காகத் தனக்குக் கிடைத்தது சரியான தண்டனையென்றே சமாதானம் செய்து கொண்டிருந்தான். இதனுல் ஆண்டவனுடைய பெருமை யை ஜமீன்தார் ஒருவாறு அறிந்துகொண்ட போதிலும் இவ்வளவு ஜல்தியில் தன்மீது இப்படிப்பட்ட தண்டனையை இறக்கியதுமட்டும் மகா அநீதியென்றே கூறிக்கொண்டிருந் தான். ஏழைகளின் குழந்தையைத் திருடியதற்காகச் செல்வ வந்தனுகிய தன்னுடைய ஏகபுத்திரியை ஆண்டவன் மரிக் கச் செய்வது அநியாயமல்லவோ வென்று தனக்குள் வாதி த்துவந்தான்; எப்படி இருந்தபோதிலும் ஊரூராய் அலைந்து திரியும் காபூலிகளின் பெண்ணுக்கீடாக மிக்க செல்வாக்கும் அதிக தன சகாயமும் பெற்றிருந்த ஒரு ஜமீன்தாரின் ஏக புத்திரியாகிய ஜூபைதாவைக் கொண்டுபோவது எந்தத் தெய்வத்துக்குத்தான் அடுக்குமென்று ஆத்திரப்பட்டான்; இக்காரியங்களிலெல்லாம் தெய்வ நீதியென்பதே கிடையா தென்று மனக்கொதிப்படைந்தான். ஆயினும் என் செய் வது? தனக்குள்ளேயே வெம்பினுன்; வெதும்பினுன். யாரி டத்தில் போய் இனி முறையிட்டுக்கொள்வதென்னும், ஒன்றும் செய்யமுடியாத உக்கிரமான கோபமே அவனு டைய உள்ளத்தை உருக்கிக்கொண்டுவந்தது. தெய்வ நீதி யில் நம்பிக்கையில்லாமற் போனதனுல் வேதத்தில் சொல்லி யிருப்பதேபோல் தொழுகையைக்கொண்டும் பொறுமை யைக்கொண்டும் ஆறுதல் அடைவதற்கும் ஒன்றும் வழி

யில்லாமற் போய்விட்டது. ஜமீன்தார் அதற்குமுன் நெடு நாட்களாகவே தன்னுடைய மார்க்கத்துக்குரிய தொழுகை, நோன்பு, தானதர்மம் முதலிய தெய்விகக் கடமைகளையெல்லாம் அடியோடு விட்டுவிட்டுப் பெயருக்குமட்டும் ஷாபாஸ் கான் என்னும் முஸ்லிம் பெயரை வைத்துக்கொண்டு திரிந்தான். ஆதலின் மாணத்துக்குப்பின் தனக்கு வரவேண்டியிருந்த நரகவேதனையை நம்முடைய ஜமீன்தார் இவ்வுலகத்திலேயே தானாகவே சுயமே சிருஷ்டித்துக்கொண்டு அனலிற்பட்ட புழுப்போல் அதில் வீழ்ந்து அல்லும் பகலும் அனவரதமும் அவஸ்தைப்பட்டுக்கொண்டு கிடந்தான்.

இவ்வாறு பல வருஷங்கள் கழிந்தன. ஜுபைதா இறந்து பத்து வருஷமாகியும் ஷாபாஸ்கானின் மனமும் தேகமும் இன்னமும் செயலற்று ஒடுங்கிக்கிடந்தன. பார்ப்போர் பித்தனென்று எண்ணும்படியான விதத்தில் நம் ஜமீன்தார் காலங்கழித்து வந்தான்; அவனுக்கு உலகவிஷயத்தில் ஒன்றும் உற்சாகமேயில்லை. இப்படியாகக் காலங்கழிந்து வரும்போது ஒருநாள் அவன் தன்னுடைய பைத்தியத்தினின்றும் தெளிந்து வெளிக்கிளம்பும்படியான பிரமயம் ஒன்று நேரிட்டது: காபூலிகளின் கார்வான் ஒன்று ஜமீன்தாரின் சொந்தக்கிராமத்தினின்றும் சில மைல் தூரத்திலிருந்த மற்றொரு குக்கிராமத்தில் வந்து குடிசை இறக்கியிருந்தார்கள்.

இவ்வாறு அவர்கள் இறங்கியதில் அசாதாரணமான விஷயம் ஒன்றுமில்லை; ஏனெனின் அப்பகுதிகளில் இப்படிப்பட்ட காபூலிக் கூட்டங்கள் வந்து இறங்காத வருஷம் ஒன்றுமிராது. ஷாபாஸ்கான் வசித்துவந்த அனார்க்கலியென்னும் ஊரானது ஒரு நகரமாயில்லாமலும் அதிகக் குக்கிராமமாயில்லாமலும் அமைந்திருந்த ஒரு நடுத்தரமான பெரிய ஊராயிருந்தது. அவ்வூரிலிருந்து அந்தக் காபூலிகள்

இறங்கியிருந்த கிராமத்திற்குச் செல்லக்கூடிய ஒரு நாட்டுப் புற ரஸ்தாவானது நல்லவிதமாகப் போடப்பட்டிருந்தது. மேலும் ஜமீன்தாருடைய ஊரிலிருந்து அந்த ரஸ்தாவின் வழியே மற்றும் பல நகரங்களுக்கும் செல்லலாம்; இதனால் அந்தப் பகிரங்க ரஸ்தாவின் வழியே அனேகவிதமான ஜனங்கள் அன்றாடம் போய்க்கொண்டும் வந்துகொண்டுமிருப்பார்கள். இக்காரணத்தினால் அந்தக் காபூலிகள் இறங்கியிருந்த கிராமத்தில் சாலையோரமாக ஒரு பெரிய கிணற்றையும் வெட்டி வழிப்போக்கர்கள் தங்குவதற்கென்று பலவிதமான மா, பலா, அசோக மரங்களையும் அங்கே உற்பத்தி செய்து வைத்திருந்தான். கால்நடைப் பிரயாணிகளும் கட்டைவண்டிப் பிரயாணிகளும் இராக்காலத்தில் வந்து அந்தத் தோப்பில் அதிகமாக இறங்குவதுண்டு; பகற்காலத்திலும் பிரயாணிகள் அந்தத் தோப்பின் நிழலில் இளைப்பாறும் பொருட்டுப் பல நாழிகைநேரம் தங்கிச் செல்வதுண்டு. ஜமீன்தாரைப் பேட்டி காணவரும் குடியானவர்களும் முதல் நாளிரவில் அந்தத்தோப்பில் தங்கியிருந்துவிட்டு மறுநாட் காலையில் ஷாபாஸ்கானை வந்து கண்டுகொள்வார்கள். ஜுபைதாவின் தாயார் இறந்துபோனபின் அக்குழந்தையின் செவிலித்தாயாகிய ஜய்த்தூன் பீபி ஜுபைதாவையும் இன்னும் இரண்டு மூன்று வேலைக்காரிகளையும் அழைத்துக்கொண்டு ஜுபைதாவின் தாயாரைப்பெற்ற மாதாபிதாக்கள் வசிக்கும் ஊருக்குச் சென்று அவர்களுடைய குமாரியின் ஞாபகார்த்தமாக அவள் வயிற்றில் பிறந்த ஜுபைதாவைக் காண்பித்து வருவது வழக்கம். ஜுபைதா உயிரோடிருந்த மட்டும் ஜுபைதாவும் ஜய்த்தூன் பீபியும் சில வேலைக்காரிகளுடன் பாட்டியாரகத்துக்குப் போய்வருவார்கள். ஜுபைதா இறந்தபின்னும் ஜய்த்தூன் பீபி அந்தப் பாட்டியாரகத்துக்குப் போய்

வருவதை நிறுத்தவில்லை; மகா கருமசிரத்தையுடன் ஒவ்வொரு வருஷத்திலும் ஜய்த்தூன்பீபி அவ்வூருக்கு யாத்திரை போய் வருவதை மறப்பதில்லை. இவ்வாறு ஒருமுறை சென்று வரும்போது மேற்கூறிய மாந்தோப்பில் ஜய்த்தூன் பீபி இளைப்பாறும்பொருட்டு வந்து தங்கினாள்; வயதுசென்ற இம் மாது அங்கே தங்கியிருக்கும்போது உடன்வந்த வேலைக்காரிகள் அருகிலிருந்த கிராமத்துக்குள் சென்று ஏதேனும் சிற்றுண்டி வாங்கி வரலாமென்று போய்விட்டார்கள். ஜய்த்தூன் பீபி ஓர் அசோக மர நிழலில் அயர்ந்திருக்கும்போது ஒரு காபூலிப் பெண்பிள்ளையானவள் தங்களுடைய குடிசையிலிருந்து புறப்பட்டு ஜலம் திரட்டும்பொருட்டு அத் தோப்பிலிருந்த கிணற்றருகில் வந்தாள். அந்தக் காபூலிகளின் டோராவைக் கண்டவுடன் ஜய்த்தூன் பீபியின் மனத்தில் ஜுபைதாவின் தோற்றம் சட்டென ஓடி வந்தது; உடனே அக் கிழவியின் கண்களினின்றும் இரண்டு சொட்டு ஜலம் கீழே விழுந்தது. பிறகு இன்னும் சில காபூலிப் பெண்கள் அக் கிணற்றண்டை வந்தார்கள். அவர்களெல்லோரும் வாலிபப் பருவமுள்ள இளங் குமரிகளாகக் காணப்பட்டனர்; அவர்களுள் சுமார் பதினெட்டு வயதுடைய மகா ரூப லாவண்யமுள்ள சௌந்தர்யவதனி ஒருத்தி காணப்பட்டாள். மற்றைப் பெண்களிடத்தில் காணப்படாத மடம், நாணம், அச்சம், பயிர்ப்புக்குரிய முகக் குறியானது அப் பெண்ணின்பால் காணப்பட்டது. அவளுடைய இப்படிப்பட்ட தன்மையையும் கம்பீரமான தோற்றத்தையும் ஜய்த்தூன் பீபி கண்டபோது அவள் காபூலிப் பெண்ணாயிருப்பது ஒருபோதும் முடியாதென்று சந்தேகித்தாள். இன்னும் உற்று நோக்கும்போது அவளுடைய அங்க அமைப்பெல்லாம் அவளொரு காபூலிப் பெண்ணல்லவென்பதையே

வெளிக்காட்டிக்கொண்டிருந்தன. எல்லாக் காபூலிப் பெண்களையும் போல் இவளும் அவர்களுக்குரிய உயரமான பாவாடையையும் தலை முக்காட்டையும் உடற் சட்டையையும் அவர்களேபோன்ற ஆபரணங்களையும் அணிந்துகொண்டு அவர்கள் பேசும் பாஷையாகிய பட்டாயிஸ் பாஷையையே பேசிவந்தபோதிலும் இவள் பிறவியால் மட்டும் காபூலிப் பெண்போல் காணப்படவில்லை.

நாணத்துடன் கூடிய இந்தப் பெண்ணின் சௌந்தர்யத்தையே ஜய்த்தூன் பீபி நெடுநேரம் வரையில் கூர்ந்து நோக்கிக்கொண்டிருந்தாள். உடனே சட்டென்று தான் தரையில் விரித்து உட்கார்ந்திருந்த ஷத்ரஞ்ஜியிலிருந்து எழுந்து அப் பெண்ணருகிற் சென்று அவளுடைய முகத்தை உற்று நோக்கினுள். தன்னை யாரோ ஓர் அயல் மனுஷி வெறிக்கப் பார்க்கிருளென்பதைக் கண்டு அப்பாலிகை கிணற்றின் மற்ருெரு புறத்துக்குப் போய்விட்டாள்; ஆயினும் அந்தச் செவிலித்தாய் அப் பெண்ணின் முகத்தினின்றும் தன்னுடைய கண்களை அப்புறப்படுத்தவில்லை. அப் பெண் எங்கெங்கெல்லாம் மருவியபோதிலும் ஜய்த்தூனின் பார்வையும் அங்கங்கெல்லாம் தொடர்ந்து சென்றுகொண்டிருந்தது. சிறிது நேரங்கழித்து ஜய்த்தூன் பீபியும் தன்னுடைய ஷத்ரஞ்ஜியில் போய் உட்கார்ந்து சாய்ந்துகொண்டாள். அங்கிருந்தபடியே பலமுறை பெருமூச்சுவிட்டுத் தனக்குள்ளே இவ்வாறு சொல்லிக்கொண்டாள்: "இல்லை! அப்படியிருப்பது முடியாது! ஆண்டவன்தான் அக்குழந்தையை நம்மிடத்திலிருந்து பிடுங்கிக்கொண்டானே! அது ஒருகாலும் முடிந்திராது. புதைகுழியை விட்டு மற்ருெரு முறையும் நான் என் ஜுபைதாவைப் பார்க்கப்போகிறேனு? என்னுடைய ஜுபைதா இப்பொழுதிருந்தால் இவ்வளவு

பருமனையடைந்திருப்பாள்; இந்தக் காபூலிப் பெண்ணைப் பார்த்தால் என் ஜுபைதாவை வைத்து உரித்தாற்போலவே இருக்கிறாள். ஆ! என்னகாலம்! நானும் இன்றே இறந்து போனால் அந்த ஆன்ம உலகிற்சென்று என்னுடைய ஜுபைதாவைக் கண்ணாரக் காணமாட்டேனோ!" இவ்வாறு கூறும் போதே அவளுடைய நயனங்களினின்றும் நீர்த்தாரையான து ஆறாய்ப் பெருகிற்று.

85496

கிணற்றங் கரைக்கு வந்திருந்த காபூலிப் பெண்களெல்லோரும் தண்ணீரை மொண்டு கொண்டு தத்தம்முடைய டேராவிற்குத் திரும்பிச்சென்று விட்டார்கள். ஆனால் ஜய்த்தூன் பீபியின் மனத்தில் ஜுபைதாவின் ஞாபகத்தை மூட்டி விட்ட அந்தப் பெண்மட்டும் தனித்து நின்றாள். வாலிபப் பருவமுள்ள ஒருபெண் எவ்வளவு சுறு சுறுப்புடன் தண்ணீர் இறைக்கக் கூடுமோ அவ்வளவு சுறு சுறுப்புடன் அந்தப் பெண் இறைக்காமல் சற்று மந்தமாகவே தண்ணீரை இழுத்துக்கொண்டிருந்தாள். இவள் தன்னுடைய குடத்தை நிரப்புமுன் மற்றைப் பெண்களெல்லாம் மாந்தோப்பைக் கடந்து மறைந்துவிட்டார்கள். இவளும் தண்ணீர்க்குடத்தை யெடுத்துக் கொண்டு மற்றவர்கள் சென்றவழியே செல்லாமல் ஜுபைதாவின் ஞாபகத்தினால் தேம்பித் தேம்பி யழுதுகொண்டிருந்த அந்த வயோதிக மாதிடம் வந்து, "அம்மா! உனக்கு உடம்புக்கென்ன? ஒரு நிமிஷத்துக்கு முன் ஏன் என்னுடைய முகத்தையே உற்று நோக்கினாய்?" என்று வினவினாள். ஜய்த்தூன் பீபி மறுபடியும் பெருமூச்சு விட்டுக்கொண்டு, "அருமைக் குழந்தாய்! உன்னைப் பார்த்தவுடன் என்னுடைய ஜுபைதாவின் ஞாபகம் வந்துவிட்டது. ஆஹா! நீ எங்கள் ஜுபைதாவைப்போலவே யிருக்கிறாயே. ஜுபைதா இன்றைக்கிருந்தால் உன்னைப்போல

வேயிருக்கும். ஜுபைதாவின் கொவ்வைச் செவ்வாயின் உதடுகளே உன்னுடைய உதடுகள். அவளுடைய அழகிய கண்களே உன்னுடைய கண்கள். ஜுபைதாவுக்குத் தமக்கை யொருத்தி இருந்திருப்பாளாயின் அவளென்றே உன்னை நான் சத்தியமிட்டுச் சொல்வேன்; ஆனால் ஜுபைதாவோ எங்கள் எஜமானுக்கு ஏகபுத்திரியாயிருந்தாள். அவள் உயிரோடிருந்திருந்தால் நீ அவளுடைய பிரதிபிம்பமென்றே கூறுவேன்,'' என்று சொல்லித் தேம்பினுள். உடனே எழுந்து நிமிர்ந்து விம்மி விம்மி யழுதபடியே அந்தக் காபூலிப் பெண்ணைக் கட்டியணைத்து முத்தங்கொடுத்தாள்; இதனால் அந்தக் காபூலிப் பெண்ணின் மனமும் இளகிவிட்டது. "அம்மா! நானும் காபூலிவயிற்றில் பிறந்த பெண்ணென்று என்னை நினைக்கவில்லை; ஏனெனின், நெடுநாட்களுக்குமுன் ஒரு பெரிய மாளிகையில் வசித்துவந்ததாகக் கனக்கண்டாற் போல் எனக்கு ஞாபகமிருக்கிறது. இப்பொழுது நான் அலைந்து திரிவதேபோல் அந் நாட்களில் என்னை ஒருவரும் எதேச்சையாக வெளியே விட்டிருக்கவில்லையென்று நினைக்கிறேன். ஆதியில்எங்கே நான் இருந்தேனென்பதும்,எப்பொழுதுநான் வெளிப்பட்டேனென்பதும், எப்படிநான் இந்தக் காபூலிகளிடம் வந்துவிட்டேனென்பதும் எனக்கொன்றும் விளங்கவில்லை. எல்லாம் பழயகால மறதியாயிருக்கிறது; எனக்குக் கருத்துத் தெரியுமுன் அப்படியெல்லாம் நடந்திருக்கலாம். ஈதெல்லாம் என்னுடைய கனவோ நனவோ ஒன்றும் புரியவில்லை. ஆ! எவ்வாருயினும் நான் ஒரு ஸ்திரமான குடும்பத்தில் தங்கியிருந்து வாசஞ்செய்ய விரும்புகிறேன்; இவர்களுடன் அடிக்கடி இடம்விட்டு இடம்பெயர்ந்து செல்வதில் எனக்குப் பிரியமில்லை,'' என்று ஜய்த்தூனின் காதில் இரகசியமாகச் சொன்னுள். அந்தக் காபூலிப்பெண் இவ்

வாறேபேசிவிட்டே நெடுந்தூரம் போயிருப்பாள். அதற்குள் "ஷீரீன்! ஷீரீன்!! நீ எங்கே யிருக்கிறாய்? அங்கே நீ என்ன செய்துகொண்டிருக்கிறாய்? அங்கே யாருடனே வார்த்தை யாடிக்கொண்டிருக்கிறாய்?" என்று கர்ண கடூரமான அதி காரத் தொனியொன்று மாந்தோப்பிற்குப் பின்னேயிருந்து கேட்டது. உடனே அப்பெண் எழுந்து அந்தக் கடுங்குரல் வந்த திசையை நோக்கி அதிக துரிதமாகச் சென்றாள். அதற்குள் ஷீரீனைக் கூப்பிட்ட கிழவியும் அதிவேகமாக நொண்டி நொண்டிக்கொண்டு எதிர்கொண்டு ஓடிவந்தாள். "அம்மா! இங்கே ஓர் கிழவி படுத்துக் கிடக்கிறாள். அவள் மிகக் கடுமையான வியாதியினால் கஷ்டப்படுவதனால் அவ ளுக்கு நான் ஏதேனும் உதவி செய்யட்டுமோ வென்று கேட்டேன்," என்று அப்பெண் சமாதானம் கூறினாள். ஆனால் அந்த நொண்டியின் மண்டைக் கூட்டில் காணப் பட்ட துளை யூசிகளைப்போன்ற இரண்டு சிறிய நெருப்புக் கண்களின்றும் வெளியான அனற்பொரியே அவளுடைய சமாதானத்தை அழுத்திவிட்டது. "சாலையோரத்தில் கிடக் கும் கிழவி சீக்காயிருந்தால் உனக்கென்ன? சுகமாயிருந்தால் உனக்கென்ன? சீக்கிரம் நடந்துவா; உன் தந்தையார் உன் னைக் கூப்பிடுகிறார்," என்று இடியிடித்தாற்போல் அந்த நொண்டித்தாய் சிம்மநாதத்துடன் கர்ஜ்ஜித்தாள். அதனு டன் அவ்விருவரும் சென்றுவிட்டார்கள். ஜய்த்தூன் பீபி மட்டும் தனியே அழுதுகொண்டிருந்தாள்; சிறிது நேரத் திற்குப்பின் கிராமத்திற்குச் சிற்றுண்டி வாங்கப் போயிருந்த வேலைக்காரர்கள் வந்தவுடன் பசியை யாற்றிக்கொண்டு சாவ காசமாகத்தங்களூரைநோக்கிஎல்லோரும் புறப்பட்டார்கள்.

வழி முழுதும் ஜுபைதாவின் செவிலித்தாயாகிய ஜய்த் தூன் பீபி தன்னுடைய ஜுபைதாவையும் இந்தக் காபூலிப்

பெண்ணையும் மாற்றி மாற்றி நினைத்துக்கொண்டே போனாள். அவள்எவ்வளவுபிரயத்தனத்துடன் இந்தஎண்ணத்தைத்தன்னுடைய மனத்தைவிட்டு விரட்டியபோதிலும் அந்தக் காபூலிப் பெண்ணானவள் தான் காபூலியின் வயிற்றில் பிறக்கவில்லை யென்றதும், நெடுநாளைக்குமுன் தானொரு பெரிய மாளிகையில் வசித்துவந்ததாகக் கூறியதும் ஜய்த்தூன் பீபியின் எண்ணத்தைவிட்டு ஒருசிறிதும் ஒழியவேயில்லை. ஒருகால் தங்களுடைய மாளிகையிலிருந்த ஜூபைதாதான் அவளோ வென்னும் சந்தேகமானது அவளுடைய உள்ளத்தின் கண் உட்கார்ந்துவிட்டது. "இறந்து கல்லறைக்குள் பத்திரமாக அடக்கம்செய்யப்பட்டவள் எவ்வகை அத்புதத்தினால் உயிர்பெற்று வெளியில் வந்திருத்தல் கூடும்! ஆனால் அல்லா(ஹ்)வுக்கு எல்லா வஸ்துக்களின்மீதும் அதிகாரமில்லையா? அவன் உயிரோடிருப்பவரை மரிக்கச்செய்பவனென்றும் மரித்தோரை உயிர்ப்பிக்கச் செய்பவனென்றும் குர்ஆன்வேதமானது கூறவில்லையா? செத்தோரை ஆண்டவன் பிழைப்பிப்பதில்என்ன ஆச்சரியமிருக்கிறது?" என்றெல்லாம் பலவாறுகச்சிந்தித்துக்கொண்டு ஷாபாஸ்கானின் மாளிகைக்குப் போய்ச் சேர்ந்தாள். உடனே தன்னுடைய எஜமானிடம் கிணற்றங்கரையில்தான் கேட்டதையும்கண்டதையும் மனப்பாடமாக ஒப்பித்துவிட்டாள். "என்னுடைய குழந்தையைக் கல்லறைக்குள் கபனிட்டுவைத்ததை என்னுடைய இந்த இரு கண்களினாலும் கண்டிராதபக்ஷத்தில் அவளே என்னுடைய சொந்த ஜூபைதாவென்று கூறுவதற்குச் சற்றும் தயங்கியிருக்கமாட்டேன். ஆயினும் ஜூபைதாவுக்காக அதிகம் அழுது அனவரதமும் கண்ணீர் வடித்ததனால் என்னுடைய பார்வையானது மழுங்கிப்போயிருக்கிறது.கான்சாஹிப்! என்னைப் போன்ற ஓர் ஏழைக் கிழவி பார்த்ததைக்

காட்டினும் தாங்களே நேரில் சென்று அவ்வுண்மையைக் கண்டுகொள்ளலாம்,'' என்று ஜய்த்தூன் பீபி ஷாபாஸ்கானிடம் வேண்டிக்கொண்டாள்.

ஜய்த்தூன் பீபி ஷாபாஸ்கானிடம் பேசும்பொழுது தயங்கித் தயங்கிப் பேசினாள். ஏனெனின், அவனுடைய குமாரி இறந்தது முதல் அவன் மனம் இன்னபாடு பட்டு வந்திருக்கிறதென்பது அந்தச் செவிலித்தாய்க்கே தெரியும். ஏதேனுமோர் நல்லசமாசாரமிருந்தால் அதனால் தன்னுடைய எஜமான் பழய தைரியத்தில்பாதியையேனும் அடைதல்கூடுமோவென்று ஆவலுடன் எதிர்பார்த்திருந்தாள். ஆனால் ஜய்த்தூன் பீபியின் சமாசாரத்தைக்கேட்டவுடன் ஷாபாஸ்கான் பிரேதக்குழியிலிருந்து எழுந்ததேபோல் திடுக்கிட்டெழுந்தான். ஒரு விநாடிக்குள் அவனுடைய அங்கமுழுதும் மின்சார சக்தியால்நிரம்பியதேபோல் ஆய்விட்டது. உடனே ஜய்த்தூன் பீபியின் கையை ஜமீன்தார் இறுகப்பற்றிக் கொண்டான். மெய் விதிர்த்து நா குளறி, "ஜய்த்தூன்! இப்பொழுதே புறப்படு; அந்தப் பிசாசுகள் இறங்கியிருக்கும் இடத்துக்கு என்னை அழைத்துக்கொண்டு போ; அவ்விடம் எங்கே யிருக்கிறது? நீ கண்டபெண் எங்கிருக்கிறாள்? என்னுடைய ஜுபைதா எங்கே?'' என்று ஆத்திரத்துடன் அவசரப்பட்டான். தன் கையைப்பிடித்த வலிமையைக் கண்டும், அவன் பிரலாபித்த வசனங்களைக்கொண்டும் ஜமீன்தாருக்குப் புத்தி தடுமாறிவிட்டதென்று அந்தச் செவிலித்தாய் எண்ணினாள். ஆயினும் அவனுடைய அதிகாரத்துக்கு இரண்டுசெய்யக் கூடாதென்று அன்றிரவே அழைத்துக்கொண்டுபோய் அந்தக் காபூலிகளிருக்கு மிடத்தைக் காண்பிப்பதாக வாக்குக் கொடுத்தாள். ஆயினும் அதற்குமுன் அரைப் பித்தால் மனமுடைந்து கிடந்த ஷாபாஸ்கான்

இதைக் கேட்டதுமுதல் "எப்பொழுது புறப்படுவோம்! எப்பொழுது புறப்படுவோம்!!" என்னும் ஏக்கத்தினுல் தூக்கம் பிடியாமல் தன் படுக்கையின்மீது புரண்டு புரண்டு கொண்டு கிடந்தான்.

பொழுது புலருமுன் ஷாபாஸ்கானும் ஜய்த்தூன் பீபியும் அவர்களுடன் வந்த சில ஏவலாளரும் அந்தக் காபூலிகள் இறங்கியிருந்த மாந்தோப்புக்கு வந்து சேர்ந்தார்கள். அவ்வதிகாலை வேளையில் காபூலிப் பெண்டுகள் எழுந்து நடமாடிக்கொண்டிருந்தார்கள்; சிலர் கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்துக்கொண்டு போனுர்கள். வேறு சிலர் தங்கள் புருஷர்களுடைய ஹுக்காவுக்கு நெருப்பெடுத்துக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள்; மற்றுஞ் சிலர் தங்கள் குழந்தைகளின் காலை ஆகாரத்துக்காக அடுப்பை மூட்டிக் கொண்டிருந்தார்கள். கிணற்றருகில் வந்திருந்தவர்களுள் இன்னுள்தான் அந்தப் பெண்ணென்று ஜய்த்தூன் பீபி காட்டுமுன் ஷாபாஸ்கான் அப்பெண்ணைக் குறியாகப் பார்த்துக்கொண்டான். அந்தப் பெண்ணின் முகம் வெயிலிலடி பட்டிருந்ததனுல் சிறிது தேஜஸ் மாறி யிருந்தது. மேலும் அவளுடைய வயதானது பதினெட்டுப்பிராயமாய்க் காணப்பட்டது. இவ்விரு வேறுபாடுகளை யல்லாமல் வேறொரு வித்தியாசத்தையும் ஷாபாஸ்கான் காணவில்லை. தன்னுடைய குமாரியே காபூலி உடையில் தனக்கெதிரில் வந்து நிற்பது போல் கண்டான். அவள் உண்மையான பெண்தானே அல்லது தன்னுடைய மகளின் பிரதிபிம்பத் தோற்றமோ என்று சந்தேகித்தான். அப் பெண் நின்றுகொண்டிருந்த இடத்திற்குச் சமீபத்தில் ஷாபாஸ்கான் சென்று அவளுடைய முகத்தை ஏறிட்டுக் கூர்ந்து நோக்கினுன். அவனுக்கு அப்பொழுது புத்தியானது தடுமாறுகிறுற்போல் காணப்

பட்டது. அவள் ஜுபைதாவோ அல்லவோவென்று தீர்மா னிப்பதுதான் அவனுக்கொரு பெருங்காரியமாய் அப்பொ ழுது காணப்பட்டது. அதிகாலையில் வெளிச்சமோ மங்கலா யிருக்கிறது; மூளையோ தடுமாறுகிறது. என் செய்வான் பாபம்! ஷாபாஸ்கான் இன்னும் சமீபத்தில் ஓடிச் சென்று அப் பெண்ணின் முகத்துக் கருகில் தன்னுடைய முகத்தை வைத்துக் கூர்ந்து நோக்கி, "அதோ தழும்பு! அதோ தழு ம்பு! ஆமாம்; அதோ தழும்பிருக்கிறது!" என்று கூக்குர லிட்டான். ஜுபைதா சிறு குழந்தையா யிருக்கும்போது ஒருமுறை ஜனனாவின் படிக்கட்டில் விழுந்துவிட்டது. அங்கே நீட்டிக்கொண்டிருந்த கல்லொன்று குத்தியதனால் ஜுபைதாவின் இடப்பக்கத்து நெறியில் ஒரு சிறு தழும்பு உண்டாய்விட்டது; இதைத்தான் ஷாபாஸ்கான் அவ் வேளை யில் அடையாளங் கண்டுபிடித்தான். உடனே கான் சா ஹிப் அப்பெண்ணை இறுகத் தழுவிக்கொண்டு கோவென்று கதற ஆரம்பித்தான். அவன் அழுத பரிதாபகர நிலைமை யானது காண்போர் உள்ளத்தையெல்லாம் கலங்கச் செய் யும் படியாயிருந்தது. "ஆ என் ஜுபைதா! ஆ என் ஜுபைதா!" என்று வாய்விட்டலறினன். அதுவரை யில் திக்பிரமை கொண்டதேபோல் அந்தக் காபூலிப்பெண் நின்றுகொண் டிருந்தாள். அவள் அசையவுமில்லை; ஒரு வார்த்தையேனும் பேசவுமில்லை. ஸ்வாஸம் விடும்பொருட்டு அவள் மூச்சுவாங்கிக்கொண்டிருந்த போது அவளுடைய நெஞ்சானது மேல் எழுந்தெழுந்து அழுந்தியிராத பக்ஷத் தில் எல்லோரும் அவளையொரு சலவைக்கல் சிலையென்றே மதித்திருப்பார்கள். இரண்டொரு நிமிஷங்களுக்குள் அவ ளுடைய கண்முன்னே தொங்கிக் கொண்டிருந்த திரையா னது கிழிக்கப்பட்டது. அவனுடைய மாளிகையில் தான்

நெடுநாளைக்கு முன் ஜீவித்துவந்த விஷயம் அவளுடைய ஞாபகத்தில் நன்ருக விளங்கிற்று; அதிலொன்றும் சந்தேகமில்லை. தான்தான் அவனுடைய மாளிகையிலிருந்த ஜுபைதாவென்னும் நினைவும் ஓடிவந்தது. உடனே "ஆமாம் பிதா! நான்தான் தங்களுடைய ஜுபைதா; ஏன் என்னைத் தாங்கள் விட்டுவிட்டீர்கள்? இதுவரையில் எங்கே சென்றிருந்தீர்கள்?'' என்றுதான் சொன்னுள். உடனே மயக்கங்கொண்டு ஷாபாஸ்கானின் பாதத்தடியில் வீழ்ந்துவிட்டாள்.

இந்தச் சம்பவமானது அந்தக்காபூலிகளைக் கிளப்பிவிட்டது. அடுப்பெரித்துக்கொண்டிருந்தவர்களும் மாந்தோப்புக்கப்பால் மாடு ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்தவர்களும் எல்லோரும் சேர்ந்து ஒருமிக்க ஓடிவந்தார்கள். அப்பொழுதுதான் ஷாபாஸ்கான் ஜய்த்தூன் பீபியை விட்டுத் தன் குமாரியைத்தூக்கி நிறுத்தும்படி செய்தான். அவ்வேளையில் அரைடஜன் காபூலிகள் அந்த ஜமீன்தாரின் மார்பின்மீது கைகொடுத்துப் பலமாகத் தள்ளினுர்கள்; அவர்களுள் ஒருவன் தன்னிடம் சுமார் பத்துவருஷங்களுக்குமுன் தன்னுடைய ஷீரீனைத் திருப்பிக் கொடுக்கும்படி வேண்டிக்கொண்டவனு யிருந்தா னென்பதைக் கண்டவுடன் ஷாபாஸ்கானின் மெய் விதிர்ப்புக் கொண்டது. ஒரு நிமிஷம் வரை ஷாபாஸ்கான் ஆச்சரியத்தினுல் அடங்கிப் பின்னேக்கி இரண்டோர் அடியை எடுத்து வைத்தான். ஆனுல் அதே நிமிஷத்தில் ஜமீன்தாராயிருந்த அந்த அதிகாரியின் ஆங்காரமுள்ள தொனியானது காபூலிகளின் இரைச்சலுக்குமேல் ஓங்கிக் கிளம்பிற்று. "அயோக்கியர்காள்! அகன்று செல்லுங்கள்! என்னுடைய குமாரியின் மீது விரல் வைக்காதீர்கள்! நீங்கள் என்னவிதமான அயோக்கிய முள்ள மாந்திரீக

சக்தியால் என்னுடைய குழந்தையைக் கவர்ந்துகொண்டு போய்விட்டீர்களென்பதை நான் அறியேன். ஆனால் இப்பொழுதோ நான் உங்களுடைய மந்திர சக்தியை எதிர்க்கும் ஆற்றல் பெற்றவனாயிருக்கிறேன்,'' என்று அதிகாரத் தொனியுடன் அட்டகாசஞ் செய்தான்.

இவ்வாறு சொல்லிக்கொண்டு ஷாபாஸ்கான் அப் பெண்ணின் பக்கம் திரும்பி அவளுடைய கழுத்தின்மீது தன்னுடைய கரங்களைப்போட்டு அத்தியந்த விசுவாசத்துடன் உச்சிமோந்து உள்ளங்குளிர முத்தமிட்டு, ''ஓ என்னருமைக் குழந்தாய்! ஓ என் அதிருஷ்ட ஹீனமான புத்திரீ! இனியொன்றும் என்னைவிட்டு உன்னைப் பிரிக்கமாட்டாது. இல்லை! இல்லை!! கல்லறையும் இனி உன்னைப் பிரிக்கமாட்டாது!'' என்று கூறினான்.

ஆனால் அப்பொழுதே திடீரென்று அவனுக்கும் அப் பெண்ணுக்குமிடையில் ஒரு காபூலியின் கையானது விழுந்தது; அந்தக் காபூலியானவன் ஷாபாஸ்கானை ஒருபுறம் தள்ளிவிட்டு அவன்பக்கம் முதுகைக்காட்டி அப்பெண்ணின் பக்கம் திரும்பிநின்று அவளை அன்புடன் ஆலிங்கனம் செய்து பின் வருமாறு கூறினான்: ''ஆ என் அருமை ஷீரீன்! உனக்கும் எனக்கும் நடுவே ஒருவரும் வரக்கூடாது. இவன் உன்னை இன்று தன் மகளென்று கூறிக்கொள்வதால் என்ன பிரயோஜனம்? நான் உன்னை நேசிப்பதேபோல் நாற்பதினாயிரம் தந்தைமார் நேசிக்கமாட்டார். இன்னும் நானூறாயிரம் தந்தைமார் என்னைவிட்டு உன்னைப் பறித்துக்கொள்வது முடியாது. நான் உன்னைப் பிரேதக் குழியிலிருந்து பிழைப்புமூட்டிக்கொண்டு வரவில்லையா?''

ஷாபாஸ்கான் அன்றிரவு எழுந்து வரும்போது அதிகமான ஆட்களைத் துணைக்குக் கொண்டுவரவில்லை. தன்னு

டைய மகள்போலிருந்த ஒரு பெண்ணைப் பார்க்கப் போக வேண்டுமென்னும் ஆவேசம் மலிந்த அவசரத்தினுல் எல்லா அங்கக்காவலரும் தயாராகுமுன் மூன்று நான்கு மனிதர்களுடனேயே புறப்பட்டு வந்துவிட்டான். ஆயினும் அந்தக் காபூலியின் பயமுறுத்தாட்டலுக்கு ஷாபாஸ்கான் சிறிதும் மனங் கலங்கவில்லை. மற்றும் பல காபூலிகள் கத்தியையும் கட்டாரியையும் உருவிக்கொண்டு சூழ்ந்து நின்றதைப் பார்த்தும் ஜமீன்தாரின் உள்ளம் துணுக்குறவில்லை. ஆனுல் அந்த வாலிபனுடைய வாயினின்றும் வெளிப்பட்ட காதற் கனிவே ஷாபாஸ்கானின் உள்ளத்தை உருக்கிவிட்டது. "கண்ணெடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள், என்ன பயனு மில" என்பதேபோல் அவனும் அவளும் ஒருவரோடொருவர் காதற் சாகர மௌனத்தில் மூழ்கியிருந்ததைக் கண்ட ஜமீன்தாரின் உள்ளம் பதைபதைத்தது. தன்னுடைய குமாரியின் பார்வையிலிருந்தே அவன்மீது அவளுக்கிருந்த ஆர்வத்தின் ஆழம் விளங்கிற்று.

மீண்டும் ஷாபாஸ்கானின் வலிமை குன்றிற்று. ஜய்த்தூன் பீபியும் மற்றையோரும் ஆச்சரியப்படும்படியான விதத்தில் ஆண்மையை யடைந்திருந்த ஷாபாஸ்கானின் தைரியமானது ஒருசிறிதுமில்லாமல் ஒடுங்கிற்று. சென்ற பத்துவருஷங்களுக்கிடையில் உடைந்துபோயிருந்ததைக் காட்டினும் அதிகமான அயர்ச்சியும் மெலிவும் இப்பொழுது ஏற்பட்டுவிட்டன. ஒன்றும் ஆற்றமாட்டாதவனேபோல் காணப்பட்டான். அப்பொழுது உதயகிரியினின்றும் வெளிக்கிளம்பிவந்த சூரியகாந்தியானது அக்கட்டழகுள்ள காளைப் பருவத்தினர் இருவரின் முகாரவிந்தத்திலும் காதலுக்கு மேற்பட்ட காந்தியின் தேஜஸைப் பிரதிபிம்பித்துக் காட்டிற்று. அதைக்கண்டு ஷாபாஸ்கான் ஒன்றும் செய்யமாட்

டாதவனேபோல் வாயைப் பிளந்துகொண்டு வேடிக்கை பார்த்து நின்றான்.

ஜமீன்தாரின் "ஆட்டபாட்ட" மெல்லாம் ஒடுங்கிவிட்டதைக் கண்டு மற்றைக் காபூலிகளெல்லாம் அவனை நோக்கிப் பரிகாசமாக ஏசினார்கள். அவமானத்தினாலும் ஆற்ற மாட்டாத் தன்மையினாலும் அவனுடைய கண்களினின்றும் ஆரம்பித்து வடிந்தகண்ணீரானது கன்னத்தையும் தாடியையும் நனைத்துவிட்டது. அப்பொழுது அந்த வயது சென்ற காபூலியானவன் அதிகமாக இடித்திடித்துக் காட்டி, தானொரு ஏழைக் காபூலியா யிருந்தபோதிலும் தன்னுடைய மகளை அவன் கொள்ளைகொண்டபோது தனக்கும் அப்படித்தான் புத்திரி சோகத்தால் துக்கமுண்டாயிற்றென்று பரிகாசம் செய்தான். புத்திரசோக மென்பது ஏழை, பணக்காரர் எல்லோருக்கும் ஒரே விதந்தான்; தனவந்தன் வீட்டுத் துக்க காரியம் ஒன்றும் பெரிதாயிராது. இதையெல்லாம் கேட்டு ஷாபாஸ்கான் மௌனமா யிருந்தபோதிலும் அவனுடைய முகத்திலும் அவயவத்திலும் மற்றுமுள்ள சரீரத்திலும் அவனுக்கிருந்த படபடப்பையும் துடிதுடிப்பையும் கண்டு, "நான் உனக்கு முன்னமே எச்சரிக்கை செய்திருந்த காபூலியின் பழிக்குப்பழி என்பது இதுதான்," என்று கிழவன் சொல்லி முடித்தான்.

அந்தக் கிழக்காபூலி சொன்னவார்த்தையைக் கேட்டு ஷாபாஸ்கானின் உள்ளமானது உருகி ஒடுங்கிற்று. என் செய்வான் பாபம்! அவனுக்குத் தன்னுடைய காணாமற் போன குழந்தை புதிதாக அகப்பட்டதனாலுண்டான பேரானந்தத்தினால் அந்தக் கிழவன் ஏசிக்காட்டிய பரிகாசத்தையும் ஒருபொருளாய் எண்ணவில்லை. மேலும் தன்னுடைய அகங்கார மமகாரங்களை யெல்லாம் ஒருபக்கம் ஒதுக்கி

வைத்துவிட்டே பின்வருமாறு அக் கிழவனுடன் பேசத் தொடங்கினான்: "இப்படியெல்லாம் நடக்கவேண்டிய விதி வசம் ஒன்றிருந்தது. பெரியோரே! நான் உமக்குத் தவறி ழைத்தேனென்பதை ஒத்துக்கொள்ளுகிறேன். ஆயினும் என்னுடைய குழந்தையைப்போலவே உன்னுடைய குழந் தையையும் நான் வளர்த்துவந்திருக்கிறேன். முதன்முத லில் உன்னுடைய மகள் காட்டிலுள்ள பூனையைப்போல் அவளுக்கு ஆறுதல் தேறுதல் சொல்லக் கூடியவரை யெல் லாம் கடித்துக்கொண்டும் கிள்ளிக்கொண்டுமிருந்தாள். அனேக சமயங்களில் என்னுடைய வீட்டைவிட்டு ஓடிப் போகவும் பார்த்தாள். ஆனால் நான் சொல்வதில் உனக்கு நம்பிக்கையில்லாவிடின் நீயே வந்து அவளைப்பார்; அல்லது இந்தக் கிழச் செவிலித்தாயைக் கேட்டுப்பார். இந்த ஜப்த் தூனையே உன்மகள் இப்பொழுதும் தன்தாயைப்போல் நேசித்துவருகிறாள். அவளை நீ எடுத்துக்கொள்; ஏனெனின் ஷீரீன் உன்னுடைய மகள். பிறகு என்னுடைய மகள் ஜுபைதாவை என்னிடம் விட்டுவிடு." அதைக்கேட்டு அந்தக் கிழவன் பின்வருமாறு பிரசங்கமாரி பொழிந்தான்: "பரிவர்த்தனை என்பது ஒருபோதும் முடியாது. உன்னு டைய மாளிகையின் மதிற்சுவர்களுக்குள் சிறைக்கூடம் போல் அடைத்து வைத்து அங்கிருக்கும் அடிமைத்தன முள்ள அசுசிகரமான கெட்ட காற்றை நீண்ட பத்து வருஷ காலம்வரையில் சுவாசிக்கும்படி செய்த அந்தப் பெண்ணைப் பெற்றுக்கொள்வதால் எனக்கென்ன பிரயோஜனம் உண் டாகப்போகிறது? எதேச்சையாக ஆகாய வெளியில் உலா வித்திரியும் காபூலிகளாகிய நாங்கள் ஒரு வீட்டை வீடுதா னென்று மதிப்பதில்லை. ஆனால் அதை அடிமை வாழ்க்கைக் குரிய சவக்குழியென்றே மதிக்கிறோம். ஆகாய வெளியில்

காணப்படும் எதேச்சையான நீலவிதானமாகிய மண்டபத்தைவிட்டு உன்னுடைய கூரைக்குள் நுழைந்தவுடன் என்னுடைய ஷீரீன் புதைகுழியில் புதைக்கப்பட்டுவிட்டாளென்றே கருதுகிறேன். எங்களுக்கு ஒரு வீடும் வீடல்ல; ஒரு நாடும் நாடல்ல. திறந்த வெளியெல்லாம் எங்களுடைய நாடே. எங்களுடைய கரடுமுரடான மோட்டாக் குடிசையே எங்களுக்கு வீடு. எங்களைக் "காட்டுமிராண்டி"களென்று நகரவாசிகள் கருதுகிறார்கள்; எங்களுடைய சாமர்த்தியத்தை அவர்கள் அறிவதில்லை. எங்களுடைய கட்டாரியினால் எப்படிப்பட்ட பலசாலியையும் வீழ்த்தி எமலோகம் அனுப்பிவிடுவோம். இஃதேபோல் எமலோகம் சென்றவரையும் நாங்கள் பிழைப்பு மூட்டி இழுத்துக்கொண்டுவந்துவிடுவோம். இதையெல்லாம் அறியாமல் நீங்கள் மகா பலசாலிகளேபோல் பேசுகிறீர்கள். நீ மடத்தனமாக உன்னுடைய குமாரியைக் கல்லறைக்குள் வைத்துப் புதைத்துவிட்டாய். நானோ அவளை அங்கிருந்து மீட்பித்தேன். அன்று முதல் அவள் உனக்குச் சொந்தமில்லை. நானே அவளைப்பெற்று வளர்ப்பதாக எண்ணிக்கொண்டு இன்றளவும் போற்றிவருகின்றேன். நான்தான் அவளைப்பெற்று வளர்த்ததாக எனக்குத் தோன்றுகிறதல்லாமல் நீ அவளுடைய பிதாவென்பதை நான் சற்றும் நிதானிக்கவில்லை. அதிகதூரம் நடந்து செல்வதற்கு அவளுக்கு நான் சிரமம் கொடுப்பதில்லை; எங்களுடைய கார்வான் மிருகங்களின்மீது அவளை ஏற்றிக்கொண்டுபோவது வழக்கம். முதன்முதலில் எங்களுடைய கூடாரங்களில் வசிக்க இஷ்டப்படாமலிருந்தவளை நாங்கள் நன்றாகப் பழக்கி யிருக்கிறோம். நான் உன்னுடைய மகளைத் திருத்துவதற்கு எவ்வளவோ பாடுபட்டு வந்திருக்கும்போது என்னுடைய

மகளை நீ காட்டிலிருக்கும் பூனையென்று சொல்லத் துணி கிருயோ? நீ என்னுடைய மகளைப் பழக்கியதைக் காட்டி னும் நானே உன்னுடைய அடிமை மகளை அதிக சிரமத்து டன் யதேச்சா ஸ்திரீயாகப் பழக்கி வந்திருக்கிறேன். இதற் கெல்லாம் காரண பூதம் நான்தானென்று பெருமைபாராட் டிக்கொள்ளமாட்டேன். என்னுடைய குமாரனே அவளைத் தன்னுடைய பலத்தினுலும் தைரியத்தினுலும் பழக்கிக் கொண்டு வந்திருக்கிருன். மேலும் அவன் தன்னுடைய காதலின் காரணத்தினுலும் அவளைத் தனக்கு வணங்கும்படி யாகவும் செய்திருக்கிருனென்று சங்கோசமில்லாமல் சொல் லத் துணிவேன். அடுப்பங்கரையில் அடைபட்டுக்கிடந்த உன்னுடைய மகளுக்கு என்னுடைய மகனைப்போன்ற ஒரு எதேச்சாதிகாரமுள்ள கணவன் கிடைப்பதென்ருல் அஃ தொரு சாமான்யமான காரியமென்ரு நினைக்கிருய்?" மீண் டும் அங்கே நாணிக்கொண்டு நின்ற ஜுபைதாவைச் சுட் டிக்காட்டி, "இவள்தான் இப்பொழுது என்னுடைய ஷீரீன்; உன் வீட்டிலிருக்கும் அந்தப் பெண்ணே உன் ஜுபைதா. அவளை நீ ஜுபைதா என்றேனும் வேறு பெயரிட்டேனும் அழைத்துக்கொள். இனியொரு முறை நாம் நம்முடைய குமாரிகளைப் பரிவர்த்தனை செய்துகொள்வது முடியாது; அஃது அறவே முடியாது!" என்று மிக்க அழுத்தமாகப் பேசினுன். உடனே "முடியாது! ஒருபோதும் முடியாது!" என்று மற்றைக் காபூலிகளும் கூச்சல்போட்டார்கள். அப் பொழுது "அறவே முடியாது," என்று ஷாபாஸ்கானை அப் புறம் தள்ளிய அந்தப் பலாட்டியனுன வாலிபன் சொல்லிப் பிறகு "இவள் உன்னுடைய மகளாயிருக்கட்டும்; ஆனுல் என்னுடைய மனைவியாயிருக்கிருள். எல்லாப்புகழும் அல்லா(ஹ்)வுக்கே; ஆண்டவன் நாடுவானுயின் அதிசீக்கிரம் இவள்

என்னுடைய குழந்தைக்குத் தாயாய்விடுவாள்,'' என்று கூறிமுடித்தான்.

அவ்வாலிபன் இவ்வாறுகூறுவதற்கு முன்னரேஜுபை தாவின் கண்களினின்றும் வெளியான காதல் தோற்றத் தைக் கொண்டும், முகத்தில் தோன்றிய மடம், நாணத் தைக் கொண்டும் ஷாபாஸ்கான் தன்னுடைய குமாரியின் மனப்பாங்கு இன்னதென்பதை ஒருவாறு யூகித்துக்கொண் டான். "ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல், காதலார் கண்ணே யுள" என்னும் நீதியின்படியும், "யானோ க்கின் நிலநோக்கும் நோக்காக் கால், தானோக்கி மெல்ல நகும்" என்னும் நீதியின்படியும் அக் குமாரனும் தன் குமாரி யும் நடந்துகொண்ட விதத்திலிருந்து ஜமீன்தார் ஜுபைதா வின் உள்ளக்கருத்தை உய்த்துணர்ந்துகொண்டான். ஆயி னும் அந்தக் காபூலி வாலிபன் தன்னுடைய உள்ளெண்ண த்தைப் பகிரங்கமாக வெளிப்படுத்திவிட்டதனால் இடியோ சைகேட்ட சர்ப்பமேபோல் ஷாபாஸ்கான் திக்பிரமை கொண்டு மயங்கிவிட்டான். உடனே தன்னுடைய கிறு கிறுக்கின்ற மண்டையைக் கைகளினால் பிடித்துக்கொண்டு, "ஏ ஆண்டவனே! ஜமீன்தார் ஷாபாஸ்கானின் மகள் ஒரு கஞ்ஜாரின் மனைவியாகவும் ஆகநேரிட்டதே!" என்று முணு முணுத்தான். "கஞ்ஜார்" என்னும் சொல்லைக்கேட்டவுடன் எல்லாக் காபூலிகளின் கண்களும் அனல்போல் பழுக்கச் சிவந்தன. மீண்டு மொருமுறை அவர்கள் தங்களுடைய கத்திகளையும் கட்டாரிகளையும் அவ்வவற்றின் உறைகளி னின்றும் கழற்றினார்கள். ஆனால் அதைக்கண்டு ஷாபாஸ் கான் திகில் கொள்ளவுமில்லை; அல்லது சண்டை செய்வ தற்கு இணங்கவுமில்லை. தன்னுடைய மனவருத்தத்தினால் ஏதோ சொல்லத் தகாததைச் சொல்லிவிட்டதனால் தான்

வருந்துவதாகவும் கூறினன். ஷீரீனின் தந்தையாகிய அந்தக் காபூலித் தலைவனிடம் "சோதர! ஆண்டவனுடைய நாட்டம்போல் நிறைவேறிவிட்டது. இனியேனும் நாம் நட்புடன் இருந்துவருவோம். நமக்குள் சம்பந்தம் ஏற்பட்டுவிட்டது. உன்னுடைய மகன் என்னுடைய மருகனுகவும், என்னுடைய ஆஸ்திக்கு வாரிஸாகவு மிருக்கட்டும்; நீயும், உன்னுடைய நண்பர்களும், கூட்டத்தார்களும் என்னுடைய உறவினரா யிருங்கள்; என்னுடைய ஆஸ்திமுழுதும் இனிமேல் உங்களுடையதே," என்று சமாதானங்கூறினன். அதைக்கேட்டவுடன் அந்தக் காபூலிக் கிழவன் "இனிமேல் எனக்குச் சொந்தமா யில்லாத என்னுடைய குமாரியைத் திருடினவனுயிருக்கும் உன்மீது நாங்கள் இரக்கங்கொண்டு இப்பொழுது நம்பிக்கை வைத்தபோதிலும் ஆகாயவெளியில் ஏதேச்சையாய்த்திரியும் என்னுடைய குமாரனின் சுயேச்சையை அதிகாரமென்றும் ஐசுவரியமென்றும் நீ நினைத்துக்கொண்டிருக்கின்ற உன்னுடைய அடிமைத்தனத்தினிடத்திலா விற்றுவிடப் போகிறேமென்று நினைக்கிருய்? உன்னுடைய ஜில்லாவில் உனக்குச் சொந்தமான அனேகம் ஏக்கர் நிலமிருந்தபோதிலும் நாங்கள் அவற்றிற்கு அடிமையாக மாட்டோம். ஆண்டவனருளால் அவனுடைய உலகமானது உன்னுடைய பெரிய எஸ்ட்டேட்டைக் காட்டினும் அதிக விசாலமுள்ளதாயிருக்கிறது. எங்களுடைய பாரசீகப் பழமொழி கூறுவதே போல் என்னுடைய காலானது நொண்டியாயில்லை," என்று ஒரே முடிபாகக் கூறிவிட்டான்.

என்ன சொல்லியும் அந்தக் காபூலிகள் கேளாததனுல் ஷாபாஸ்கான் முரட்டுப் பிடிவாதங்கொண்டு தன்னுடைய குதிரையின் ஜேணத்தில் ஒளித்து வைத்திருந்த பிஸ்ட்

டோலே எடுத்து அக்கிழவனே நோக்கிச் சுட எத்தனித்தான். உடனே ஜமீன்தாரின் செய்கையைக் கூர்மையாக நோக்கிக்கொண்டிருந்த ஜுபைதாவின் காதலன் "ஏ கையாலாற்றமாட்டாத மடயா! உன்னுடைய முட்டாள் தனத்தை நிறுத்து!" என்று சொல்லி ஷாபாஸ்கானின் பிஸ்ட்டோலேயும் கையையும் சேர்த்துப் பிடித்துக்கொண்டான். பலாட்டியனுன அந்த வாலிபனின் பிடியினின்றும் திமிறிக்கொண்டு ஷாபாஸ்கானுல் ஒன்றும் செய்யக்கூடவில்லே. ஆனுல் கான்சாஹிபின் கையிலிருந்த ரிவால்வரைப் பிடுங்கிக்கொண்டு அந்தக் கட்டழகுள்ள காளேப்பருவத்தான் கூறத் தொடங்கினுன்: "நீ இவ்வாறு துஷ்டத்தனத்தில் இறங்கியதனுல் உன்னுடைய உயிரானது இப்பொழுது எங்களுடைய கையிலிருக்கிறது. ஆனுல் ஷீரீன் என்னும் என்னுடைய காதலியாகிய உன்னுடைய ஜுபைதாவின் நிமித்தம் இன்று உனக்கு உயிர்ப்பிச்சை யளிக்கிறேன். அடே முட்டாள்! உன்னுடைய குமாரியை அவளுடைய விருப்பத்துக்கு மாற்றமாக நாங்கள் பலாத்காரமாக இறுத்திக்கொண்டிருக்கிருேமென்று நீ மூடத்தனமாய் எண்ணுகிருற்போல் இருக்கிறது. நீ என்னுடைய தங்கையை அவளுடைய விருப்பத்துக்கு மாற்றமாக உன்னுடைய மாளிகையென்னும் சிறைக் கூடத்தில் மடக்கிவைத்திருப்பதேபோல் நாங்கள் உன்னுடைய குழந்தையைப் பலவந்தமாகப் பிடித்து வைத்தில்லே. இப்பொழுதே உன்னுடன் போக அவளுக்கு விடை கொடுக்கிறேன்; உன் மீது அவளுக்குப் பிரியமிருந்தால் உன்னுடன் வருவாள்; ஆனுல் என்மீது அவளுக்குக் காதலிருந்தால் என்னேவிட்டு நகரமாட்டாள். என்பால் அவளுக்கிருந்துவரும் காதற்பெருக்கில் எனக்கொன்றும் சந்தேகமில்லே. உன்னுடைய மனத்

துயரத்தைப் பின்னும் அதிகப்படுத்தும் பொருட்டு அவள் தன்னுடைய காதலனும் நாயனுமாகிய என் பின்னே வரப் போகிறுள் பார்!"

இவ்வாறு சொல்லிவிட்டு அவ்வாலிபன் ஆண் பறவை யானது தன்னுடைய பெண் பறவையைக் கூவி யழைக்கும் சமிக்ஞைபோன்ற ஒரு காபூலிக் காதற் கண்ணியை மிருது வான தொனியில் பாடிக்கொண்டு மெல்ல மெல்ல நடந்து சென்றான். முதன் முதலில் ஜுபைதாவின் நிலைமையானது ஒரு விதமான தீர்மானத்திற்கும் வராமல் தயங்கிக்கொண் டிருந்தாற்போல் காணப்பட்டது. அவள் என்ன செய் யப்போகிறுளென்று எல்லோரும் அக் கன்னிகையின் மீதே கண்ணோட்டமிட்டுக் கொண்டிருந்தனர். ஆனுல் அவளுடைய காதலன் இருபதடி தூரம் செல்லுமுன் ஜுபைதா அவனைப் பின்தொடர்ந்து அடியெடுத்து வைத் தாள். முதலில் மெல்ல மெல்லச் செல்லத் தொடங்கினுள். மாந்தோப்பின் எல்லையைக் கடக்கு முன் தன்னுடைய முகத்தைத் திருப்பி ஷாபாஸ்கானையும் ஜய்த்தூன் பீபியை யும் பரிந்து நோக்கினுள்; தந்தையென்னும் பாசத்தையும் விட்டுக் காதலனுடன் கலந்து பின்பற்றிச் சென்றனளே யென்னும் அடங்காக் கோபத்தினுல் அந்த ஜமீன்தார் ஆத் திரங்கொண்ட போதிலும், மாந்தோப்பின் கோடியில் நின்று மிக்க இரக்கத்துடன் திரும்பிப் பார்த்த மகளின் தோற்றத்தைக் கண்டு கான்சாஹிபின் கோபாக்கினி முழு தும் குன்றிப்போய்விட்டது. தன்னுடைய கஷ்டகாலத் தின் கொடுமையே யல்லாது கன்னிகை ஜுபைதாவின்மீது கடுகத்தனையும் குற்றமில்லையெனக் கண்டுகொண்டான். ஆயினும் அவளுடைய பரிந்து நோக்குந் தன்மையைக் கண்டபோது, ஒரு பக்கத்தில் தந்தையின் பாசத்தாலும்

மற்ஞெரு பக்கத்தில் காபூலியின் காதலாலும் ஈர்க்கப்பட்டு, "பொன்போலும் கள்ளிப் பொரிபறக்கும் கானலிலே என் பேதை செல்லற் கியைந்தனளே" என்னுமாபோல் காதலின் பிணைப்பால் கட்டுண்டிழுக்கப்பட்டுத் தன்னை யறியாமலே தள்ளிக்கொண்டு போகப் படுவதைக் கண்டான். மரணத்தின் அருவருப்பான துயரச் செய்தியை மறைக்கும் பொருட்டுத் தன்னுடைய குமாரியின் பிரேதத்தின் குழியின்மீது பதிற்ருண்டுகளுக்குமுன் வெண்சலவைக் கற்களை நிறுத்தி அழகிய ஞாபகச் சின்னத்தைக் கட்டிய காலத்தில் மரணமேன்பது பணக்காரர் ஏழை, சிறியோர் பெரியோர் என்னும் வேற்றுமையில்லாமல் எல்லோரையும் சமன் செய்யக் கூடிய நிரவற் கருவியென்று ஒருபோதும் ஷாபாஸ்கான் நினைத்தனனில்லை.

"தவத்துறை மாக்கள் மிகப்பெருஞ் செல்வர்
ஈற்றிளம் பெண்டிர் ஆற்ருப் பாலகர்
முதியோ ரென்ஞன் இளையோ ரென்ஞன்
கொடுந் தொழிலாளன் கொன்றனன் குவிப்பவிவ்
அழல்வாய்ச் சுடலை தின்னக் கண்டும்
கழிபெருஞ் செல்வக் கள்ளாட் டயர்ந்து
மிக்க நல்லறம் விரும்பாது வாழும்
மக்களிற் சிறந்த மடவோ ருண்டோ?" (மணி மேகலை)

இப்பொழுது ஒரு பெரிய அதிகாரியா யிருந்த ஜமீன்தாரின் குமாரி யொருத்தி தன்னுடைய மனப் பூர்வமான சுய இச்சையாகவே ஒரு "கஞ்ஜாரின்" மீது வைத்த காதலினுல் தந்தையையும் தாயான செவிலியையும் விட்டு ஏகிவிட்டாள்! மாந்தோப்பைக் கடந்தவுடன் ஜுபைதாவின் தோற்றமும் மறைந்துவிட்டது. ஷாபாஸ்கானும் தன்

னுடைய குதிரை மீதேறி இறங்கிய முகத்துடன் வந்த வழியே திரும்பிச் சென்றான்.

ஷாபாஸ்கான் தன்னுடைய மாளிகைக்குத் திரும்பி வந்து ஒருமணிநேரத்துக்குள் அவ்வூர் முழுதும் அச்செய்தி பரவிற்று. உடனே அவனுடைய குடிபடைகளும் ஏவற் காரர்களும் கூட்டங்கூட்டமாக வந்து குழுமினார்கள். ஜமீன் தாரின்மீது தாம்கொண்ட அனுதாபத்தினால் வந்து சேர்ந்த வர் பலர்; ஆனால் அந்த ஆச்சரியமான அற்புதச் செய்தி யைக்கேட்டு அங்குவந்து கூடியவர் மிகப்பலர். ஆயினும் ஷாபாஸ்கான் ஒருவரையும் பார்க்க மனமில்லாமல் துக்க மேலீட்டால் ஓர் அறைக்குள் புகுந்து கதவைத் தாழக்கோ லிட்டுக்கொண்டான்; அன்று முழுதும் அவ்வறைக்குள் ளேயே இருந்தான். ஆனால் அவன் துக்கமேலீட்டால் தற் கொலை புரிந்துகொள்ளக்கூடுமென்றஞ்சி அங்கிருந்தோர் அஸ்தமித்தவுடன் அவ்வறையின் கதவை உடைத்துப் பிளக்க எத்தனித்தனர்; உடனே ஷாபாஸ்கான் தாழ்ப்பா ளைத் திறந்துகொண்டு வெளியில் வந்தான். அனுதாபங் கொண்டவர்க ளெல்லோரும் அதிக ஆச்சரியங்கொண்டு அவனையே தன்னுடைய கதையைப்பற்றிச் சொல்லும்படி வேண்டிக்கொண்டார்கள். ஆனால் இறுதியில் பலர் இக் கதையை நம்பமுடியாதென்று வாதிக்கத்தொடங்கினார்கள். அங்குவந்து சேர்ந்திருந்த வயோதிகரான ஹக்கீம் சாஹி பும் ஜுபைதா இறந்துவிட்டது வாஸ்தவந்தானென்று கூறினார். "சொகராத், பலாத்தூன், அரிஸ்தொதீல், ஹிபா கிராத்தீஸ், ஜய்லான் முதலிய எல்லா யூனானி முறைகளைக் கொண்டும், அவை யெல்லாவற்றைக் காட்டினும் என்னு டைய ஷெய்கின் இரகசியமான உபதேசமுறைகளைக் கொண் டும் ஜுபைதாவை அன்று பத்துவருஷங்களுக்குமுன் நான்

நன்ருகச் சோதித்தேன். அடக்கஞ் செய்வதற்குமுன் பல மணிநேரங்களுக்கு முன்னரே அப்பெண்ணின் அங்கமுழுதும் உயிரற்ற சலவைக்கல்லேபோல் ஜில்லிட்டு நீர்த்துப் போயிருந்தது. நான் சொல்வது பொய்யாயின் என்னுடைய ஹக்கீம் தனத்தையே விட்டுவிடுகிறேன்,'' என்று அந்த ஹக்கீம் சாஹிப், ஷாபாஸ்கானின் குமாரியைப் பிழைக்கச் செய்ய முடியாமற் போய்விட்டபின்னர் அந்த ஜமீன்தாரின் மனத்தில் இந்த ஹக்கீமைப்பற்றி ஏதோ நல்லெண்ணம் இன்னும் எஞ்சியிருப்பதேபோல், அதிக வீரப்பிரதாபத்துடன் சபதங்கூறினர். இதைக்கேட்டவுடன் அங்கே கூடியிருந்த எல்லோரும் இறந்துபோன ஜுபைதா பின்னே பிழைத்திருப்பது முடியாதென்று ஒரே பிடிவாதமாகப் பேசத்தொடங்கினர். ஷாபாஸ்கானுடன் மாந்தோப்புக்குச் சென்று அங்கே நடந்தவற்றை நேரில் கண்டுவந்த ஒரு சிலரைத் தவிர்த்து மற்றையோரெல்லாம் அவ்வற்புதத்தை மறுத்து வந்தனர்.

இவ்வாறு ஒருவரோடொருவர் வாதாடிக்கொண்டிருந்ததனுல் அவ்வூர் முழுதும் பெருங்கூச்சல் பரவிவிட்டது. ஊர்வாயைமூட உலைமூடி இல்லையென்பதேபோல் சுற்றுப் பக்கங்களிலிருந்த ஆயிரக்கணக்கான ஜனங்கள் திரள் திரளாக அங்கேவந்து கூடினர். எல்லோரும் சேர்ந்து ஏகமாக வாதித்ததனுல் இறுதியில் ஜுபைதாவின் சவக் குழியைத் தோண்டிப் பார்ப்பதே சரியென்று தீர்மானித்தார்கள். இதற்கு ஷாபாஸ்கானும் அரை மனத்துடன் அனுமதி கொடுத்தான். உடனே எல்லோரும் அந்தச் சவக்குழியின் சலவைக்கல் சின்னத்தருகிற் சென்று பத்துப் பன்னிரண்டு பலாட்டியமுள்ள வேலைக்காரர்களை ஏவினர்கள்.

அன்றிரவு நடுச்சாம முதல் நாலுமணி நேரம் வரையில் அத்தொழிலாளிகள் பன்னிருவரும் அதிக சிரமத்துடன் வேலை பார்த்துவந்தார்கள். பாட்டுக்கும் பொழுதுக்கும் சரியாயிருந்தது. அவர்களும் அப் பிரேதக் குழியைத் திறந்துவைத்தார்கள். அப்பொழுதுதான் கிழக்கு வெளுத்து உடுக்குலங்களும் ஒவ்வொன்றாய் மறைந்துவந்தன. உதயகிரியின் அப்புறத்தில் ஆழத்திலிருந்த அருணோதயத்தின் முதல் ஒளியானது சிறிதுசிறிதாக வீசிக்கொண்டிருந்தது. வெளிச்சமோ மங்கலாயிருந்தது. புதை குழியோ வாய் திறந்து காட்டிற்று. அதற்குள் என்ன காணப்பட்டது! சவக் குழியின் உட்புறமெல்லாம் வழு வழுப்பாயும் மிகப் பள பளப்பாயும் புதியதோர் கல்லறையே போல் காணப்பட்டது. ஷாபாஸ்கான் எட்டிப் பார்த்தான். உள்ளே ஒன்றுமில்லை! உடனே பிரமித்தான். பெருமூச் செறிந்தான். நின்றான். நிலைகுலைந்தான். வெறி கொண்டான். வீழ்ந்திறந்தான். மறுநாட் காலையில் ஷாபாஸ்கானை அச் சவக் குழியினுள்ளேயே வைத்து எல்லோரும் சேர்ந்து நல்லடக்கம் செய்துவிட்டனர்.

அறுசீர் விருத்தம்

வடிக்கும் புனித மண்மந்துவழு
வழுப்பாய்ப் புதிதாய் வெறுமையெனும்
படிக்குத் திறந்த சவக்குழியைப்
பகரு மிரண்டோர் வினடிவரை
துடிக்கு மனத்தான் ஷாபாஸ்கான்
சுருக்கென் றெட்டிப் பார்த்துடன்வீழ்ந்
தொடுக்க முற்றான் பின்பதன்கண்
உடலம் புதைக்கப் பட்டானே.

The Guardian Press, 158-B, Broadway, Madras.

இயேசுவின் இரகசியம்

இஸ்லாத்தைத் தாக்கி எழுதிய கிரிஸ்தவப் பாதிரிமார்களின் 14 வினாக்களுக்குத் தக்கவிடை இதில் கொடுக்கப்பட்டிருக்கிறது. குர்ஆனிலிருந்தும் பைபிளிலிருந்தும் போதுமான ஆதார ஆதேயங்கள் காட்டப்பட்டிருக்கின்றன. கிரிஸ்தவர்களின் வாய் அடங்கும்படியான சரியான கடாவுதல் இதில் கூறப்பட்டிருக்கிறது. கிரிஸ்தவருடன் மல்லாடும் ஒவ்வொரு முஸ்லிமுக்கும் ஏனையோருக்கும் இது அத்தியாவசியமானது. எம்மிடம் விற்பனைக்குத் தயாராயிருக்கிறது. விலை ரூபா 1—8—0.

முஸ்லிம்களின் முன்னேற்றம்

இது ஓர் அழகிய சிறந்த நூல். இதில் நம்முடைய முன்னேற்றத்துக்குரிய உணர்ச்சியானது முஸ்லிம் உலகத்தில் எவ்வாறு தழைத்தோங்கி வருகிறதென்னும் விஷயம் விளக்கி எழுதப்பட்டிருக்கிறது. ஆபிரிக்காவின் உட்பிரதேசத்தில் உலகத்துக்குத் தெரியாமல் ஸென்னூசிகளென்னும் ஒருவகை இரகசியக் கூட்டத்தார்கள் எவ்வாறு இஸ்லாத்துக்கு வேண்டிய காரியங்களை அந்தரங்கமாய்ச் செய்துவருகிறார்களென்னும் நுண்ணிய விஷயமும் இதில் காணப்படும். விலை அணு 6 தான்.

தாஜ் மஹால்

உலகோர் போற்றும் உயர்ந்த கோரியாகிய அதி விசித்திர அழகிய தாஜ்மஹாலைப்பற்றிய ஒரு நூல். இதில் பல ஹாப்டோன் படங்கள் உண்டு. ஆக்ராவுக்கு நேரில் செல்லும் பாக்கியம் பெறுதோர் இதிலுள்ள வருணனையால் அதை நேரில்கண்டதேபோல் மனத்திருப்தியை யடையலாம். வழுவழுப்பான காகிதம்; பளபளப்பான அச்சு. விலை அணு 4 தான்.

"ஈமான்"

இவ்வழகிய நூல் இஸ்லாமார்க்கத்தின் ஈமான் சம்பந்தமான மூலக்கொள்கையாகிய ஏழு அம்சங்களைப்பற்றி விரிவாகவும்விளக்கமாகவும் புத்திக்கும் யுக்திக்கும் பொருந்தும் வண்ணம் இனிய தமிழில் எழுதப்பட்டுள்ளது. "ஈமான் முஜ்மல்" (விவரிக்கப்படாத ஈமான்) ("ஈமான் முபஸ்ஸல்" (விவரிக்கப்பட்ட ஈமான்) ஆகிய இவற்றின் விவரமும் காணப்படுவதுடன் இஸ்லாத்தில் ஈமான் கொள்ளவேண்டிய விஷய விளக்கமும் அதன் துஆவும் உடன் காணப்படும். சிறுவர்களும் உணர்ந்துகொள்ளத்தக்க விதம் வரையப்பட்டிருக்கிறது. அவசியமான அரபு வாக்கியங்க ...க்கப்பட்டிருக்கின்றன. விலை அணு 4

2/9/94

இஸ்லாம்

சித்திரப்படத்துடன் கூடியது.

நெடுநாளாய் எதிர்பார்த்திருந்த இவ்வழகிய நூல் மிக நேர்த்தியான பைண்டுடன் பளபளப்பான காகிதத்தில் இப்பொழுது வெளிவந்திருக்கிறது. இதில் தொழுகைக்கு வேண்டிய பல அருமையான சித்திரப்படங்களும் நிரப்பப்பட் டிருக்கின்றன. பிறருடைய உதவியின்றி இஸ்லாத்தின் ஐந்து கடமைகளையும் அவற்றின் தத்துவங்களையும் இந் நூலைக்கொண்டும் இதிலுள்ள சித்திரங்களைக் கொண்டும் ஒவ்வொருவரும் நன்கு தெரிந்துகொள்ளலாம். இதிலுள்ள மஸ்அலாக்களெல்லாம் சரியான மூலக்கிரந்தங்களிலிருந்து தழுவிப் படிப்போருக்கு அதி எளிதில் விளங்குமாறு மிக விளக்கமாகப் புதியமுறையில் செந்தமிழில் எழுதப்பட்டிருக்கின்றன. இதில் குர்ஆனிலிருந்து 105-வது முதல் 114 முடிய இறுதி 10 ஸூராக்களும் அல்ஹம்து ஸூரா உள்படத் தமிழ் அர்த்தத்துடன் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இக்காலத்திலுள்ள முஸ்லிம்கள் ஒவ்வொருவருக்கும் இது அத்தியாவசியமாகும். இஸ்லாத்தின் அனுஷ்டான முறைகளை அறிந்துகொள்ள விரும்பும் ஒவ்வொரு ஹிந்துவுக்கும் இஃது அத்தியாவசியமா யிருக்கும். இதை வாங்கிப் பார்ப்போருக்கே இதன் விலை அணா 14 மிகக் குறைவென்பது புலனாகும்.

"தாருல் இஸ்லாம்"

இஃதோர் உயர்தர மாதாரம்பச் செந்தமிழ்ச் சஞ்சிகை.

இவ் வுயர்தர மாதச் சஞ்சிகையைப்பற்றி அதிகமாய் ஒன்றும் கூறத் தேவையில்லை. மதசீர்திருத்தத்துக்கும், ஆசார சீர்திருத்தத்துக்கும், கல்வியின் முன்னேற்றத்துக்கும், ஹிந்து முஸ்லிம் ஒற்றுமைக்கும் இப்பத்திரிகையே கங்கணங் கட்டிக்கொண்டிருக்கிறதென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. இதன் அருமையையும் பெருமையையும் ஆழ்ந்து நோக்குங்கால் இதன் சந்தா மிகக் குறைவானதாகவே காணப்படும். உள்நாட்டுக்கு வருஷசந்தா ரூபா 3 தான். வெளிநாடுகளுக்கு ரூபா 4. ஹிந்து சகோதரர்களுக்கும் பொதுஸ்தாபனங்களுக்கும் எல்லா மாணவர்களுக்கும் வருஷ சந்தா ரூ. 2—0—0; வெளிநாட்டுக்கு ரூ. 3—0—0. ஒவ்வோர் ஆண் பெண் கையிலும் இப்புஸ்தகம் ஹஸ்தபூஷணமாய் விளங்கத் [illegible]. உடனே எழுதுங்கள்.

தாருல் இஸ்லாம் புஸ்தகசாலை,

தபாற்பெட்டி நெ. 15, சென்னை.